பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 22 | வியாழக்கிழமை 08.11.2018 | கதிர் 03

**இது ரகசியம் அல்ல!**

வவுனியாக் கூட்டத்தில் ஜனாதிபதி மீதான சீற்றத்தில் அவரை ஒருமையில் அழைத்து சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனின் கோபம், நேற்று ஜனாதிபதியைக் கூட்டமைப்புக் குழுவினர் சந்தித்தபோதும் தொடர்ந்ததாக அறியவந்தது. பக்கம் 02

# நடுநிலை வகியுங்கள்! கெஞ்சினார் மைத்திரி

## அடியோடு நிராகரித்தது சம்பந்தன் குழு

கொழும்பு, நவம்பர் 08

நாடாளுமன்றத்தில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும்போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டாம் எனவும், பிரேரணையை எதிர்த்து வாக்களிக்குமாறும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நேரில் கேட்டுக்கொண்டார். ஆனால், இந்த வேண்டுகோளுக்கு இணங்கமாட்டோம் என்று கூட்டமைப்பினர் தெரிவித்தபோது, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க முடியாவிட்டால் அதனை ஆதரிக்காமல் நடுநிலையாவது வகியுங்கள் எனவும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார். எனினும், ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கையை அடியோடு நிராகரித்த கூட்டமைப்பு எம்.பிக்கள், புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்க முடிவெடுத்த நாம் அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களிப்போம் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். பக்கம் 11

## வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு சபாநாயகர் கரு அவசர கடிதம்!

### மைத்திரி மீது சரமாரியான குற்றச்சாட்டுகள்

கொழும்பு, நவ. 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சபாநாயகர் கரு ஜயசூரிய கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கு நேற்று பக்கம் 11

## ஆட்சிமாற்றம் தவறானது எதிரணியில் அமர்வேன்!

### மஹிந்தவின் சகா அறிவிப்பு



கொழும்பு, நவ. 08

புதிய அரசில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் ஏற்கப்போவதில்லை என்று மஹிந்த அணி உறுப்பினரான குமார வெல்கம நேற்று அறிவித்தார்.

அத்துடன், எதிரணியில் அமர்ந்து சுயாதீன எம்.பியாக பக்கம் 11

## தமிழர்களை ஏமாற்றி மைத்திரி வரலாற்றுத் தவறிழைத்துள்ளார்

### சாடுகின்றார் மாவை எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 8

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகத்தான் எடுத்துக்கொண்ட கொள்கைகயை மீறியும், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை மறந்தும் செயற்பட்டு வரும் ஜனாதிபதி பக்கம் 11

## தமிரசுக் கட்சியிலிருந்து விக்னேஸ்வரன் விலகல்

### மாவைக்குக் கடிதம் மூலம் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 08

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்கினேஸ்வரன் இலங்கைத் தமிழரசுக்கட்சியிலிருந்து விலகுவதாகக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்குக் பக்கம் 11

## சுகாதார அமைச்சராக மஹிந்தவின் சகோதரர்



கொழும்பு, நவ. 08

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சமல் ராஜபக்ஷ, சுகாதார சேவைகள் அமைச்சராக நேற்று இரவு ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11

## நாடாளுமன்றம் கலைக்கப்படாது

### ஐ.தே.கவின் கட்டுக்கதையை நம்பாதீர் இப்படிக் கூறுகின்றனர் மைத்திரி – மஹிந்த

கொழும்பு, நவ. 08

எக்காரணம் கொண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பில் ஐ.தே.கவினர் கட்டுக்கதைகளை வெளியிட்டு வருகின்றனர். இதனை எவரும் நம்ப வேண்டாம்.

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபாலவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர். பக்கம் 11

## நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி!

### ஜனாதிபதியிடம் அதிகாரம் உள்ளது என்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர்



கொழும்பு, நவ. 08

நாட்டில் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வாக ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலுக்குச் சென்று யாருக்கு ஆட்சி அதிகாரம் இருக்கின்றது பக்கம் 02

## புதிய அரசுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் ரணிலின் கரங்களைப் பலப்படுத்துவோம்


### மைத்திரியிடம் இடித்துரைத்தது முற்போக்குக் கூட்டணி

கொழும்பு, நவ. 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து அமைக்க முயற்சிக்கும் புதிய அரசுக்கு ஆதரவளிக்கப் பக்கம் 02

## மைத்திரி-மஹிந்த அரசுக்கு ஆதரவளிக்கமாட்டாது மு.கா.

### ரவூப் ஹக்கீம் திட்டவட்டம்



கொழும்பு, நவ. 08

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மைத்திரி – மஹிந்த தலைமையிலான புதிய அரசுடன் இணைவதாகப் பிரதி பக்கம் 02

## வியாழேந்திரனை மீண்டும் இணைக்காது கூட்டமைப்பு

### மாவை திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கட்சி தாவித் தற்போது பிரதிஅமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பக்கம் 11

## மைத்திரிக்கு அமெரிக்கா மீண்டும் கடும் எச்சரிக்கை

### நாடாளுமன்றைத்தை உடன் கூட்டுமாறு வலியுறுத்தல்



வாஷிங்டன், நவ. 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டும். மேலும் தாமதித் பக்கம் 11

## ஊடக அமைச்சு ஜனாதிபதி வசம்

கொழும்பு, நவ. 08

ஊடகத்துறை அமைச்சும் அதன் கீழ் செயற்படும் ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்த சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரக்கூடிய அமைச்சுகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை குறைவடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரை மட்டுமே

## அதன் பின்னர் சபை ஒத்திவைக்கப்படும்

கொழும்பு, நவ. 08

நாடாளுமன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி கூடும்போது ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மாத்திரமே இடம்பெறும் என்றும், அன்றையதினம் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய தேவை இல்லை என்றும் மைத்திரி அணி எம்.பியான லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பிரதமர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

14 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையில்லை. அன்றையதினம் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்ய முடியாது. ஆளுங்கட்சி என்பதால் எமக்கே நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்குரிய பகுதி ஒதுக்கப்படவேண்டும். இதுவிடயத்தில் சபாநாயகர் கட்சிசார்பின்றி செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை, அரசமைப்பிலுள்ள ஏற்பாட்டின் பிரகாரமே 14 ஆம் திகதி நடவடிக்கை இடம் பெறும். அதற்கு புறம்பாக எதுவும் நடக்காது என்று ஆளுந்தரப்புப் பேச்சாளர்களில் ஒருவரான கெஹலிய ரம்புக்வெல்ல கூறினார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதியை உரிய மரியாதையுடன் விளித்த சுமந்திரன், அரசியல் கருத்து விடயத்தில் நேருக்கு நேர் – முகத்துக்கு முகம் – 'மறுத்தான்' கொடுத்துப் பேசினார் என்று தெரிகின்றது.

*"தமிழ் மக்கள் எனக்குத்தான் வாக்களித்தார்கள். நான் அதை மறவேன்"* – என்று ஒரு கட்டத்தில் கூறினார் ஜனாதிபதி மைத்திரிபால. அது, தமிழ் மக்களினதும் பிரதிநிதி தாமேதான் என்று அவர் கூறுகின்றமை போல அமைந்தது.

உடனடியாகப் பதிலடி கொடுத்தார் சுமந்திரன்.

*"தமிழ் மக்கள் உங்களுக்கு மட்டுமல்ல, இதற்கு முந்திய ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கும் ஒன்று திரண்டு வாக்களித்தனர். அது உங்களுக்கோ, சரத் பொன்சேகாவுக்கோ அளிக்கப்ட்ட வாக்குகள் அல்ல. மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வாக்குகள். அந்த வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்துவிட்டு, அதே மஹிந்த ராஜபக்ஷவை பின்கதவால் நீங்கள் பிரதமராக்குவது உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முதுகில் குத்திய வேலை"* – என்று சீறிப் பாய்ந்தார் சுமந்திரன்.

*"மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாக வாக்களியுங்கள். முடியாவிட்டால் குறைந்தபட்சம் நடுநிலையாவது வகியுங்கள்."* – என்று கெஞ்சாத குறையாக கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி கோரிக்கை வெளியிட்ட போதும் அதனைக் கூட்டமைப்பினர் நெற்றிக்கு நேராகவே முடியாது என்று நிராகரித்தனர்.

*"மஹிந்த ராஜபக்ஷவை எங்கள் மக்கள் அடியோடு நிராகரிக்கின்றனர்; வெறுத்து ஒதுக்குகின்றனர். அவரை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் எந்த முயற்சிக்கும் நாம் துணை நிற்க முடியாது. மஹிந்தவை எதிர்க்கின்றோம் என்பதற்காக ரணிலை ஆதரிக்கின்றோம் என்று அர்த்தமல்ல. உங்களுக்கு ரணிலைப் பிடிக்கவில்லை என்றால் மாற்றுக்களை ஆராயுங்கள். அதனடிப்படையில் முடிவுகளை எடுத்து அறிவியுங்கள். நாம் ஆதரிக்கமுடியுமா என்று பார்க்கின்றோம்."* – என்று ஜனாதிபதியிடம் கூறினராம் கூட்டமைப்புப் பிரதிநிதிகள்.

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் ஒற்றுமைபூர்வமாக – ஒரே நிலைப்பாடாக – வெளியிட்ட கருத்தினால் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார் ஜனாதிபதி.

★ ★ ★

தமக்கு அதிகாரம் இல்லாத போதிலும் அதிகாரம் இருப்பது போல பந்தா காட்டிக் கொண்டு, நாடாளுமன்றக் கலைப்பு என்ற முயற்சியை ஆரம்பித்த ஜனாதிபதி , இப்போது அந்த எத்தனத்தைக் கைவிட்டுவிட்டார் என நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னாள் பிரதம நீதியரசரும், நீதித்துறையில் சர்ச்சைக்குரியவராக விளங்குபவருமான சரத் என் சில்வா சந்தித்தார். அதன் பின்னர் நேற்று காலை அவர் ஒரு கருத்தை வெளியிட்டார்.

*"நாட்டில் நெருக்கடியான – மிகக் குழப்பகரமான – நிலைமை நீடித்தால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடலாம். அதை அரசமைப்போ, சட்டமோ தடுக்காது."* – என்று அவர் கயிறு விட்டபோதே ஐ. தே. க வினரும் பிறரும் உஷாரடைந்து விட்டனர்.

அரசமைப்புக்கு முரணாக நாடாளுமன்றத்தை எதேச்சாதிகாரமாகக் கலைக்க ஜனாதிபதி முயற்சிக்கலாம் எனச் சந்தேகித்த தரப்புகள் எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு பிரசாரத்தில் இறங்கின.

மீண்டும் ரணிலைப் பிரதமராக்க இடமளிப்பதில்லை என்று கங்கணம் கட்டி நிற்கும் ஜனாதிபதி சிறிசேன, அத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்காக நாடாளுமன்றத்தை முற்கூட்டியே – உடனடியாகவே – கலைக்கும் 'மூட்'டில்தான் நேற்றிரவு வரை இருந்தார்.

ஆனால் நேற்று முன்னிரவு நடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் வெளியிடப்பட்ட காரசாரமான கருத்துக்களினால், நாடாளுமன்றைக் கலைத்து புதிய தேர்தலை விரைந்து நடத்தும் எத்தனத்தை அடியோடு கைவிட்டார் ஜனாதிபதி.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்தமைக்கான பழிக்குத் தாம் பொறுப்பேற்கத் தயார் இல்லை என அங்கு மஹிந்தார் கூறினார்.

சுதந்திரக் கட்சியில் கடைசி வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நின்ற 23 எம்.பிக்களும் கூட இது விடயத்தில் மிகக் கடுமையான நிலைப்பாட்டை எடுத்தனர். சு. கவின் செல்வாக்கு மிக மோசமாகச் சரிந்து போய்க் கிடக்கும் இந்தச் சமயத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்தினால் தாங்கள் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வரவே முடியாது என்ற யதார்த்தம் புரிந்த அவர்கள் நேற்று மாலைக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் யோசனைக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனை அடுத்து நாடாளுமன்றத்தை ஒருதலைபட்சமாகக் கலைக்கும் தனது முடிவை ஜனாதிபதி கைவிட்டாராம் என்று கூறப்படுகின்றது.

திடீர் தேர்தல் என்ற கலக்கத்தில் பேச்சு மூச்சற்றுப் போயிருக்கும் நம் எம். பிக்கள் பலரின் வயிற்றில் பால் வார்த்த செய்தியாகத்தான் இத்தகவல் இருக்கும் என்பது நிச்சயம்.

- மின்னல் -

## கம்போடிய கண்ணிவெடியகற்றும் குழுவினர் முகமாலைக்கு விஜயம்



கம்போடிய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் கிளிநொச்சி, முகமாலைப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தனர்.

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் ஒன்பதுபேர் அடங்கிய கம்போடியக் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் முகமாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வெற்றிக்கரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும்பணியைபார்வையிட்டுள்ளனர்.

கம்போடியாவும் உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக அதிகளவு கண்ணிவெடி அபாயம் நிறைந்த நாடாகக் காணப்படுவதால் இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட இந்தக் குழுவினர் வருகை தந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோண்டாவிலில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் கோண்டாவில் றோ. க. த. க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் இணைச் செயலாளர் திரு. க. செவ்வேள் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. எவ். எக்ஸ். அன்ரன் அவர்களும், யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி க. சோதிதாசன் அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

## ஆசிரியர் பேரோளர் மாநாடு நாளை

யாழ்ப்பாணம், நவ. 08

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண ஆசிரியர் பேரோளர் மாநாடு வெள்ளிக்கிழமை 9 ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் வடமாகாணச் செயலாளர் ஸ்ரீகந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, ஜே. வி. பி. மத்தியகுழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

'வடமாகாணக் கல்விநிலையும் ஆசிரியர்களின் வகிபாகமும்' என்ற தலைப்பில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை சிறப்புரை ஆற்றுவார்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை தீர்மானிக்க வேண்டும் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் 70ஆவது சரத்தின்படி நாடாளுமன்றம் நான்கரைவருடங்களின் பின்னரே கலைக்கப்பட முடியும் என்று திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை உடையவர் என்று கூறும் 33ஆவது சரத்து ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கூட்டும், ஒத்திவைக்கும் மற்றும் கலைக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ரணில் விக்கிரமசிங்க அரசு 2002இல் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை சர்வஜன வாக்கெடுப்பு இன்றிக் கலைக்க முடியாது என்ற வகையில் அறிமுகப்படுத்திய திருத்தத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. நாடாளுமன்றக் கலைப்பு என்பது எப்போதுமே நிறைவேற்று அதிகாரமாக இருந்துள்ளது. அதனை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி இல்லாமலாக்க முடியாது.

எனவே, 33ஆவது சரத்து தற்போதைய 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்க வேண்டியதாயிற்று. அல்லாவிட்டால் 19 ஆவது திருத்த சட்டத்திற்குச் சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்பட்டிருக்கும்.

ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இருக்கின்றது. அது தேவைப்படும் சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே அதனைப் பயன்படுத்தவேண்டும். அது மக்களுக்கும் நாட்டுக்கும் தேவைப்படும்போது, ஸ்திரமற்ற நிலையில் உள்ள நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் – என்றார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தும் வகையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கவும் முடிவெடுத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பிக்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய அரசுக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்த வேளையிலேயே, கூட்டணி உறுப்பினர்களால் அது கூட்டாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்திப்பு குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள மனோ கணேசன்–

நாகரிகமான ஒரு அரசியல் இயக்கம் என்ற அடிப்படையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆறு (6) எம்.பிக்களும் ஒரு குழுவாக எனது தலைமையிலேயே, ஜனாதிபதி மைத்திரியை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலே சந்தித்து அவரது அரசாங்கத்தில் இணைய முடியாது என நேரடியாகக் கூறிவிட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியில் பங்காளிக் கட்சியாகவுள்ள மலையக மக்கள் முன்னணியும், கூட்டணியின் ஏனைய இரு எம்.பிக்களும் மஹிந்தவை ஆதரிக்கவுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராகப் பதவியேற்றுள்ள நிஷாந்த முத்துஹெட்டிகம கூறியுள்ள கருத்தைக் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் மறுத்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு உலமாக்கள் கலந்துகொண்ட சந்திப்பிலேயே ரவூப் ஹக்கீம் இக்கூற்றை மறுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை.

அதேவேளை, புதிய அரசில இணைவதாக பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம கூறிய கருத்தை நான் அடியோடு மறுக்கின்றேன் என்று ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெரும்பான்மை நிரூபிக்கும் அவசியம் அறவே கிடையாது

## அரசு மீண்டும் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, நவ. 08

நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய தேவை தமக்கு இல்லையென மைத்திரி-மஹிந்த தலைமையிலான அரசு மீண்டும் அறிவித்துள்ளது.

தமக்கு 113 இக்கும் அதிகமானோர் ஆதரவாக இருக்கிறார்கள் என்றும் அது தெரிவித்தது.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர்களான மஹிந்த சமரசிங்க மற்றும் கெஹலிய ரம்புக்வெல ஆகியோரிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை முன்வைத்தார்கள்.

இதற்கு பதிலளித்த போதே இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் கெஹலிய –

அமைச்சரவையை முழுமையான நியமிக்க எமக்கு எதிர்வரும் 14ஆம் திகதிவரை கால அவகாசம் உள்ளது. இதில் எந்தவொரு சிக்கலும் இல்லை.

ரணில் விக்ரமசிங்க மற்றும் அவர் சார்ந்தவர்களே தற்போது பிரச்சினைகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எவ்வாறாயினும், எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது எமக்கான பெரும்பான்மையான ஆதரவை அனைவரும் கண்டுகொள்ள முடியும். இப்போதும் 113 உறுப்பினர்களுக்கும் மேல், எமது இந்த புதிய அரசுக்கு ஆதரவை வழங்கியுள்ளார்கள்–என்றார்.

இதனை ஆமோதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த சமரசிங்க –

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூடும்போது நாம் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய எந்தவொரு தேவையும் கிடையாது.

எதிர்த்தரப்பினருக்கு வேண்டுமாக இருந்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து, அவர்களின் பெரும்பான்மையை நிரூபித்துக்கொள்ளட்டும். எனவே, இந்த விடயத்தில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை –என்றார்.

# கிளிநொச்சியில் சிறப்பாக நடந்த கேதார கௌரி விரத வழிபாடுகள்



கிளிநொச்சி, நவ. 08

கடந்த இருபத்தொரு நாட்கள் விரதம் இருந்து நேற்றுக் காப்பு கட்டி நிறைவுற்றது கேதார கௌரி விரதம்.

கிளிநொச்சியில் உள்ள பல ஆலயங்களில் குறிப்பாக அம்மன் ஆலயங்களில் சிறப்பாக இடம்பெற்று நிறைவுற்றது இவ் விரதம்.

இவ் விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் அனுஷ்டிக்கின்றனர். மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்கவேண்டியும் மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டியும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

கிளிநொச்சியில் பெருமளவான பெண்களும் மற்றும் ஆண்களும் பக்தி பூர்வமாக விரதத்தின் இறுதி நாளான நேற்றுக் காப்பு அதனை கட்டி நிறைவு செய்துள்ளனர். (ஐ–70)

# சட்டவிரோதமாகக் குப்பைகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை

## யாழ். பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 08

யாழ்ப்பாண நகரத்தில் சட்டவிரோதமாகக் குப்பைகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசூரிய அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகளான ஸ்ரான்லி றோட், கே.கே.எஸ் வீதி மற்றும் பிரதான வீதி உட்பட பல்வேறு முக்கிய வீதிகளிலும் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்படுவதை பொலிஸார் தடுக்கவேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு பொதுமக்களினால் குப்பைகள் பொருத்தமில்லாத இடங்களில் கொட்டப்படுவதற்கு, கழிவகற்றல் செயன்முறை உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படாமையே காரணம்.

எனவே யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் நல்லூர் பிரதேசசபை ஆகியன பொதுமக்கள் குப்பைகளை கொட்டுவதற்குப் பொருத்தமான இடங்களை உடனடியாக அடையாளப்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு குப்பைகளைக் கொட்டுவதற்கு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பின்னரும் பொதுமக்கள் வீதிகளில் குப்பைகளைக் கொட்டினால் பொலிஸார் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுப்பார்கள்.

சட்டத்துக்கு புறம்பான வகையில் வர்த்தக நிலையங்களின் கழிவுகளை வெளியேற்றிய 37 வர்த்தகர்கள் மீது இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, வீதிகளில் குப்பைகளைக் கொட்டிய 7 பேர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# ஜனாதிபதியின் உத்தரவை மீறிச் செயற்படமாட்டேன்!

## பொலிஸ்மா அதிபர் திட்டவட்டம்



கொழும்பு, நவ. 08

சட்டம் ஒழுங்கு அமைச்சுக்குப் பொறுப்பானவர் என்ற ரீதியில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலின் பிரகாரமே செயற்படுவோம் எனப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோரி சட்டம் ஒழுங்குகள் தொடர்பான முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார நேற்று முன் தினம் பொலிஸ் தலைமையகத்தில் கடிமொன்றைக் கையளித்திருந்தார்.

எனினும், வர்த்தமானியின் பிரகாரம் சட்டம் ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதியிடமே உள்ளது. அதனால் அந்தக் கடிதம் செல்லுபடியற்றதென பொலிஸ்மா அதிபர் மேலும் கூறினார். (ஐ)

# கிழக்கில் சீரற்ற காலநிலை 249 குடும்பங்கள் பாதிப்பு



மட்டக்களப்பு, நவ. 08

மட்டக்களப்பில் தொடர்ச்சியாகப் பெய்யும் கடும் மழை காரணமாக 3 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 249 குடும்பங்களைச் சேர்ந்த 876 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் 179 குடும்பங்களிலுள்ள 656 பேர் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

வாகரை, கோறளைப்பற்று, கோறளைப்பற்று மத்தி ஆகிய 3 செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலையில் தஞ்சமடைந்தவர்களுக்கு பிரதேச செயலாளர் ஊடாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கிரான் பிரதேசத்திலுள்ள மக்களை மீட்க மாவட்ட அரச அதிபரின் பணிப்புரைக்கமைய படகு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் மட்டக்களப்பு புனானை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள ரயில் தண்டவாளம் சேதமடைந்துள்ளது. அதனைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ஐ)

# வர்த்தமானியைச் சபாநாயகர் புறந்தள்ளி செயற்படமுடியாது

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ. 08

ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக செயற்பட சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அதிகாரம் இல்லையென அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது புதிய அரசுக்கு இணங்கவே ஆசன ஒதுக்கீடு இடம்பெற்றிருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போது, சபாநாயகர் அண்மையில் வெளியிட்ட பிரதமர் தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்பு தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய பிரதமர் தொடர்பிலான முடிவை அரசமைப்புக்கு உட்பட்டே மேற்கொண்டுள்ளார். இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளிவந்துவிட்டது.

வர்த்தமானி அறிவித்தலை கேள்விக்குட்படுத்தும் அதிகாரம் நாட்டில் எவருக்கும் கிடையாது. இதில் ஆட்சேபனைகள் இருப்பின் உயர்நீதிமன்றின் ஊடாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மாறாக ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்குப் புறம்பாகச் சபாநாயகரினால் செயற்பட முடியாது.

எனவே, எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது கட்சிபேதம், அரசியல் பேதம் பாராது, அரசமைப்புக்கு உட்பட்டு, சபாநாயகர் ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நாடாளுமன்றக் கலைப்பு சாத்தியமா?

பதவியில் இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசை சட்டமுறையற்ற விதத்தில் பதவியில் இருந்து அகற்றிவிட்டு, மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது குழுவினரையும் பின் கதவினால் அதிகாரத்துக்குக் கொண்டு வரும் ஜனநாயக விரோத நடவடிக்கையை முன்னெடுத்த அதிபர் மைத்திரிபால சிறிசேன, இப்போது ஆப்பிழுத்த குரங்கின் நிலையில் அல்லாடுகின்றார் என்கின்றன கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு நாடாளுமன்றத்தில் தேவைப்படும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதியும் அவரது தரப்பினரும் முன்னெடுத்த பகீரதப் பிரயத்தன முயற்சிகள் இன்னுமே பலன் தரவில்லை எனக் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ தரப்பை பின் கதவால் அதிகாரத்துக்குக் கொண்டு வந்துவிட்டு, நாடாளுமன்றத்தை முடக்கினால், அந்த அவகாசத்துக்குள் குதிரைப் பேரங்களை நடத்தித் தேவையான எண்ணிக்கையான எம்.பிக்களை வளைத்துப் போட்டுவிடலாம் என்ற திட்டம் பலிக்குமாற் போல தெரியவில்லை. போட்ட முதலுக்கே ஆபத்து என்பது போல, மைத்திரி – மஹிந்தர் தரப்பில் இருக்கும் எம். பிக்களே, ரணில் பக்கத்துக்குத் தாவி விடுவரோ என்ற அரசியல் நிலைமை தெற்கில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ரணில் மீண்டும் பிரதமராக வரும் சூழல் ஏற்படுமானால் அடுத்த ஒரு மணி நேரத்தில் பதவி விலகி, மக்களுடன் சேர்ந்து போரடாச் சென்றுவிடுவேன் என்று விளைவுகளை யோசிக்காமல் தம்பாட்டில் பகிரங்மாக அறிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைகின்றார்.

ஆறு எம்.பிக்களை வைத்திருக்கும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு முன்னணி, ஏழு எம். பிக்களை கொண்டிருக்கும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐந்து எம். பிக்களை வைத்திருக்கும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸ், 14 எம். பிக்களை வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு என முப்பத்திரண்டு எம். பிக்களைக் கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களின் கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில் அணி வகுத்துள்ளன. அரசமைப்பிற்கும், சட்டத்திற்கும் முரணாக மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கையை அங்கீகரிப்பதில்லை என்பதில் அவை பிடிவாதமாக நிற்கின்றன.

அதனால், குறுக்கு வழியால் பெரும்பான்மையை எட்டும் மைத்திரி – மஹிந்த அணியினரின் எத்தனங்கள் பலிக்கப் போவதில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் ஆரூடம் கூறுகின்றன.

தனது இந்த முயற்சி பலிக்காமல் போவதால் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய தேர்தலுக்கு உத்தரவிடலாமா என்ற யோசனை ஜனாதிபதி தரப்பில் மிகத் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுவதாகவும் நேற்றுக் கூறப்பட்டது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின்படி இந்த நாடாளுமன்றத்தை 2020 பெப்ரவரி மாதம் முடிவடைவதற்கு முன்னர் நேரத்துடன் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பது தெளிவானது.

பதவியில் இருக்கும் பிரதமரை அதிலிருந்து அகற்றும் விடயத்திலேயே அரசமைப்புக்கு முரணாக நடந்து கொண்ட ஜனாதிபதி, அதே பாணியைப் பின்பற்றி – தமக்கு அரசமைப்பு ரீதியாக அதிகாரம் இல்லை என்று தெரிந்திருக்கின்ற போதிலும் – நாடாளுமன்றத்தைக் கலைக்கும் உத்தரவை விடுக்கலாம் என்று பேச்சடிபட்டது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட சட்டநிபுணர் ஒருவர் *“நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் இப்போது ஜனாதிபதிக்கு இல்லை. அது தெளிவானது, திட்டவட்டமானது. ஆகையால் சட்டரீதியாக அவர் அப்படிச் செய்யமுடியாது என்பது தெளிவு. ஆனால் அதையும் மீறி, இந்த ஜனாதிபதி அப்படித் தம்பாட்டில் – எதேச்சாதிகரமாக – நடக்கமாட்டார் என்றும் உறுதி கூறமுடியாது. ஏனென்றால் அவரின் அண்மைக்காலப் போக்குகள் அப்படித்தான் இருக்கின்றன.”* – என்றார்.

அரசமைப்பு ரீதியாகத் தனக்குள்ள மட்டுபடுத்தப்பட்ட அதிகாரத்தை மீறி, அதைக் கையில் எடுத்து நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தாலும் கூட, அரசமைப்பை மீறிய அந்தச் செயலுக்கு அமைய அடுத்த பொதுத் தேர்தலை நடத்த சுயாதீன தேர்தல் ஆணையம் இணங்குமா, இத்தகைய வரம்பு மீறிய செயல் உயர்நீதிமன்றத்துக்குச் சென்றால் நாடாளுமன்றக் கலைப்பை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்யுமா என்ற கேள்விகள் எல்லாம் எழுகின்றன.

ஏற்கனவே நாடாளுமன்றத்தை முடக்கி, சர்வதேச எதிர்ப்பைச் சம்பாதித்து நிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமக்கு இல்லா அதிகாரத்தைப் பிரயோகித்து நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து, இன்னொரு மீளமுடியாத சிக்கலில் மாட்டிக் கொள்வார் என்று நாம் நம்பவில்லை.

# வியாழேந்திரன் விட்ட தவறை திருத்திக்கொள்ளச் சந்தர்ப்பம்

## கூறுகின்றார் ஸ்ரீ நேசன் எம்.பி.



மட்டக்களப்பு,நவ.08

தவறுகள்தப்புகளாக மாறுவதற்குள்வியாழேந்திரன் கூட்டமைப்புடன் மீண்டும் இணைய வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ நேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஆட்சி காலத்தில் நடைபெற்ற அராஜகங்கள், அடாவடித்தனங்கள் மற்றும் கடத்தல்கள் ஆகியவற்றுக்கு எதிராக செயற்பட வேண்டுமெனவும் அவர்களுக்குத் தண்டனைகளை வழங்கி, தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அபிலாஷைகளை நிறைவேற்றவேண்டுமெனவும் தெளிவாக தமிழ் மக்கள் தங்களின் ஆணையை வழங்கியிருந்தனர்.

ஆனால் அவற்றை எல்லாம் முழுமையாகப் புறக்கணித்துவிட்டு, மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்காமல், தன்னுடைய சுயநல அரசியலுக்காக யாருக்குஎதிராகவாக்களித்தோமோ, அவர்களுடன்கூட்டணி அமைத்து தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டீர்கள்.

அந்தவகையில் தவறுகள் எவருமே விடலாம். ஆகையால் அதனை திருந்திக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதனால் இப்போது இருக்கின்றகாலத்தையாவதுபயன்படுத்தி, அத்தவறுகளைத் திருத்திக்கொண்டு மீண்டும் கட்சியில் இணைந்து கொள்வதற்கு வியாழேந்திரன் சிந்திப்பாராயின் அது சிறந்தவொன்றாகும்.

சிலரின் தவறான வழிநடத்தலினால் உங்களது எதிர்கால அரசியல் நகர்வுகளைப் பூச்சியமாக்கி கொள்ளாமல் தவறுகள் தப்புகளாக மாறுவதற்குள் மீண்டும் கட்சியில் இணைந்து செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றார்.(ஐ)

# மன்னார் மனிதப் புதைகுழியில் இதுவரை 18 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் மீட்பு!



மன்னார், நவ. 08

மன்னாரில் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் மீட்கப்பட்டவற்றில்18 எலும்புக்கூடுகள் சிறுவர்களுடயவை எனச் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்று 102 ஆவது நாளாகவும் இடம்பெற்று வரும் நிலையில், இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

102 ஆவது தடவையாகவும் மனித எலும்புக்கூடுகள் அகழ்வுப்பணிகள் இடம்பெறுகின்றன. இதுவரை 232 மனித எலும்புக்கூடுகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் 224 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள மனித எலும்புக்கூடுகளை அப்புறப்படுத்தும் பணிகள் தொடர்சியாக இடம் பெற்று வருகின்றன.

கடந்த வாரத்தில் சந்தேகத்துக்கு உரிய விதமாகச் சில தடயப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதில் மோதிரம் போன்ற ஒரு தடயப் பொருளும் மாபிளை ஒத்த ஒரு தடயப் பொருளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த மனிதப் புதைகுழியில் இருந்து கிடைக்கப் பெற்ற முக்கிய தடயப் பொருளான பிஸ்கட் பைக்கற் தொடர்பான அறிக்கையானது நீதிமன்றத்துக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அந்த அறிக்கை தொடர்பான விவரங்களைத் தற்போது தெரிவிக்க முடியாது–என்றார்.(ஐ)

# ஆலயத்துக்குள் ராணுவம் பக்தர்களுக்கு இடையூறு

## வவுனியாவில் தீபாவளி தினத்தில் அசௌகரியம்

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இராணுவத்தின் தீபாவளி நிகழ்வுக்காக ஆலயப் பக்தர்களின் வழிபாட்டுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இராணுவம் மற்றும் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் தேசிய தீபாவளி நிகழ்வு இடம்பெற்றது. மாவட்ட செயலகத்தில் இருந்து அரச அதிபர், மேலதிக அரச அதிபர், கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் நிகழ்வுக்கு வருகை தந்தனர். நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினரும் தமது சீருடைகளுடன் ஆலயத்துக்குள் பிரவேசித்திருந்தனர்.

காலையில் இருந்து மதியம் வரை இராணுவமயமாக ஆலயச் சூழல் காட்சியளித்தது. இதனால் இந்துக்களின் விசேட விரதங்களில் ஒன்றான கேதாரகௌரி விரதம் அனுஷ்டித்தவர்களும், தீபாவளித் திருநாளில் வழிபடச் சென்றவர்களும் அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர்.

ஆலயத்துக்குள் வழிபாடுகளை மேற்கொண்ட பக்தர்களையும் இராணுவத்தின் வருகைக்காகச் சுதந்திரமாக வழிபடவிடாது ஆலய நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் ஓரமாக விரட்டினர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ-100)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

“பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் போது பூமியிலுள்ள மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்.”

*- பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)*

## நாளை

09.11.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: அனுசம் மு.இ. 10.09 வரை
திதி : துதியை மு.இ. 10.29 வரை
சுபநேரம் : 6.05 – 7.35 வரை
இராகுகாலம் : 10.35 – 12.05 வரை



# கூட்டமைப்பினரின் முடிவுக்கு சிவசக்தி கட்டுப்படமாட்டார்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 08

**தற்போதைய அரசியல் நெருக்கடியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகளுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்.நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கட்டுப்பட்டுச் செயற்படமாட்டார் என்று அந்தக் கட்சியின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கியது அரசமைப்புக்கு முரணானது என்றும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்கப் போவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இந்தநிலையில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான வியாழேந்திரன் அரச தரப்புக்குத் தாவி பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுள்ளார்.

அதேவேளை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருந்த, ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் நிலைப்பாடு குறித்தும் பல்வேறு செய்திகள் வெளியாகி வந்தன.

இந்த நிலையில், இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ள சுரேஷ் பிறேமச்சந்திரன்,

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை, கூட்டமைப்பின் முடிவு கட்டுப்படுத்தாது, எந்தவொரு முடிவை எடுப்பதற்கு முன்னரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். நிலைமைகளை அவதானிக்கும். நிலைமைகள் எப்படிப் போகின்றன என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். – எனக் கூறியுள்ளார். (ஐ)

# கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம்; இந்தியாவுடனான பேச்சுக்களில் இழுபறி



இலங்கையில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பினால், கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக, இந்தியாவுடன் நடத்தப்படவிருந்த பேச்சுக்களில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பாக 2017 ஏப்ரல் மாதம் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

மலிக் சமரவிக்ரமவுக்கும் சுஸ்மா சுவராஜ்க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் விரும்பியபோதும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரான மஹிந்த சமரசிங்கவும் அதனை எதிர்த்தனர்.

இதனால், இழுபறிகள் ஏற்பட்டிருந்தன. ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை பதவி நீக்கப்படுவதற்கு முன்னர்– கடைசியாக நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது, இதுகுறித்து இந்தியாவுடன் பேசி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய அரசியல் நெருக்கடிகளால், திட்டமிட்டபடி இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்த முடியவில்லை என்று துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சரான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்ட பின்னர், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுடன், இதுபற்றித் தாம் பேச்சு நடத்தவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

2017 இல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாடு இந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளதாக ஐ.தே.க. தவறாக ஏற்றுக் கொண்டபோதிலும், அதனை இலங்கை ஏற்றுக் கொள்ளாது என்றும் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில் இந்தியாவின் முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# மத்தள, கொழும்பை இந்தியா கேட்டதன் பின்னணி என்ன?

## வெளிப்படுத்துகிறார் விஜேதாஸ



கொழும்பு, நவ. 08

அம்பாந்தோட்டைத் துறை முகத்தைச் சீனாவுக்கு வழங் கியதால் தான், கொழும்புத் துறைமுகத்தையும், மத்தள விமான நிலையத்தையும் இந்தியா கோரியது என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் நடந்த அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க அரசு, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்குச் சீனாவுக்கு வழங்கியது. அதனால் தான், மத்தள விமான நிலையத்தையும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தையும் தமக்குத் தருமாறு இந்தியா கோரியது என்றும், அவர் கூறினார். (ஐ)

# நாடாளுமன்ற ஊழியர்கள் மைத்திரி - மஹிந்த பக்கம்

## பெரும் நெருக்கடியில் சபாநாயகர்

நாடாளுமன்றத்தின் ஊழியர்கள் ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஆதரவாக செயற்பட ஆரம்பித்துள்ளமையுடன் சபாநாயகரின் உத்தரவுகளை ஏற்க மறுத்து வருகின்றனர் என கொழும்பு டெலிகிராவ் செய்தி வெளியிட்டுள்ளது. அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலிருப்பதற்காக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சபாநாயகரை விமர்சித்து வருகின்றனர் என தெரிவித்துள்ள கொழும்பு டெலிகிராவ், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தலைமையிலான நாடாளுமன்றப் பணியாளர்கள் சபாநாயகருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ளது.

தம்மிம தசநாயக்க தனது பணியாளர்களைச் சபாநாயகரின் உத்தரவுகளைப் புறக்கணிக்குமாறு வெளிப்படையாகவே உத்தரவிட்டு வருகின்றார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

அரச ஊழியர் என்ற அடிப்படையில் நான் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலையே பின்பற்றவேண்டும் என அவர் குறிப்பிட்டுவருகின்றார் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதியினால் சட்டவிரோதமாக இடைநிறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற அமர்வுகளை மீண்டும் கூட்டுவதற்கான சபாநாயகரின் முயற்சிகள் பலனளிக்காத நிலை காணப்படுகின்றது. நாடாளுமன்றச் செயலாளர் நாயகமும் அதிகாரிகளும் இதற்கு ஒத்துழைப்பை வழங்க மறுக்கின்றனர் எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை தினேஸ் குணவர்த்தன பௌத்த மதகுருமார்களுடன் நாடாளுமன்றத்திற்குச் சென்று அவைத்தலைவர் பொறுப்பை ஏற்க முயன்றவேளை நாடாளுமன்றச் செயலாளர் நாயகமே நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லயின் அலுவலகக் கதவைத் திறந்துவிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து லக்ஸ்மன் கிரியல்ல சபாநாயகரை தொடர்புகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையையும் உரிமைகளையும் பாதுகாக்குமாறு கோரியவேளை சபாநாயகர் தான் அதிகாரமில்லாத நிலையில் உள்ளார் என்று தெரிவித்துள்ளார் எனக் கொழும்பு டெலிகிராவ் குறிப்பிட்டுள்ளது

ஜனாதிபதியையும் புதிய பிரதமரையும் திருப்திப்படுத்து வதற்காக தசநாயக்க வெளிப்படையாகவே சபாநாயகரின் உத்தரவை ஏற்க மறுத்து வருவதுடன் தான் வர்த்தமானி அறிவித்தலையே பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்து வருகின்றார் என சபாநாயகர் தனக்கு நம்பிக்கைக்குரியவர்களிடம் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்பட்டுள்ளது. இதேவேளை ஜனாதிபதியின் அறிவிப்பை மீறி அதற்கு முன்னதாக நாடாளுமன்றத்தைக் கூட்ட முயன்றால் நானும் எனது பணியாளர்களும் அதற்கு ஒத்துழைக்க மாட்டோம் எனச் சபாநாயகருக்கு தசநாயக்க தெரிவித்துள்ளார்.(ஐ)

# மஹிந்தவுக்காக சு.க. யாப்பில் திருத்தங்கள்

கொழும்பு, நவ. 08

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பான முக்கியமான செயற்குழுக் கூட்டம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது. இன்று மாலை 4 மணியளவில் பத்தரமுல்லவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்பதை சில காலமாகத் தவிர்த்து வந்த மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்தச் செயற்குழுக் கூட்டத்தில், கட்சியை மறுசீரமைப்பது மற்றும், கட்சியின் யாப்பில் திருத்தங்களைச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியில் கூடுதல் பொறுப்பை அளிக்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் புதிய பணிப்பாளர் பதவியேற்பு



கிளிநெச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி தங்கராஜா காண்டீபன் நேற்றுக் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் உத்தியோகபூர்வ மாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் நீண்ட கால இடைவெளியின் பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையேற்ற நிரந்தரப் பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான வைத்திய கலாநிதி த. காண்டீபன் தமது மருத்துவக் கல்வியை யாழ்ப்பாண மருத்துவ பீடத்திலும், மருத்துவ முதுமாணிக் கற்கை நெறியைக் கொழும்பு மருத்துவபீடத்திலும் பூர்த்தி செய்துள்ளார்.

இவர் அரச வைத்தியர் சங்கத்தின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பாளராக இருந்து வடமாகாண வைத்தியசாலைகளில் நிலவிய வைத்தியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு பெரும்பங்காற்றியவர். ஐ

# இந்து - முஸ்லிம் பிரச்சினையை குஜராத்தில் ஏற்படுத்த திட்டமா?

## வெளியாகியுள்ள காணொலியால் சர்ச்சை



புதுடில்லி, நவ. 08

குஜராத் பாவ்நகரில் இனவாதப் பிரச்சினைகள் ஏற்படுத்தும் வகையில், வீடியோ ஒன்று சமீபத்தில் வைரலானது.

அந்தக் காணொலியில், முஸ்லிம்களைப் பொருளாதார அளவில் புறக்கணிக்கவேண்டும் என இந்து அமைப்புகள் மற்றும் பா.ஜ.க ஊழியர்கள் கேட்டுக்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

பாவ்நகர் மாவட்டத்தில் உள்ள தலாஜா நகரத்தின் தாலுகா அலுவலகத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. இது குறித்த விசாரணையை பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

### என்ன பிரச்சினை?

வைரலாகிய அந்த வீடியோவில், பாவ்நகர் மாவட்டத்தின் விஷ்வ இந்து பரித் அலுவலர் கிரித் மிஸ்ரி, ’யார் உண்மையான இந்துவோ, அவர்கள் முஸ்லிம் வணிகர்களுடனோ அல்லது முஸ்லிம் மக்களிடமோ எந்தப் பணக் கொடுக்கல் வாங்கல் ஏதும் வைத்துக் கொள்ள மாட்டார்கள்’ என கோஷங்கள் எழுப்பியுள்ளார்.

முஸ்லிம்களுடன் எந்த தொழிலும் வைத்துக் கொள்ள மாட்டோம் என அனுமருக்கு முன் உறுதிமொழி ஏற்றுக் கொள்கிறோம் என்றார் அவர்.

கிரித் மிஸ்ரியை பிபிசி குஜராத்தி தொடர்பு கொண்டபோது, மீண்டும் சில நிமிடங்களில் அழைக்கிறேன் என்று கூறிய அவர், திரும்ப அழைக்கவில்லை.

அந்தக் காணொலியில் இவருடன், பாவ்நகர் பா.ஜ.க நிர்வாக குழு உறுப்பினர் அஷோக் சோலங்கி, பா.ஜ.க கிஸன் மோர்ச்சாவின் தலைவர் ச்வரியா உள்ளிட்ட பலரும் இருந்தனர்.

### அரசு அலுவலகத்தில் அனுமதியற்ற செயல்பாடுகள்

தலாஜாவில் உள்ள தாலுக்கா அலுவலகத்திற்கு பா.ஜ.க ஊழியர்களுடன் விஷ்வ இந்து பரித் மற்றும் பஜ்ரங் தல் ஊழியர்களும் சென்றுள்ளனர்.

மஹுவாவில் விஷ்வ இந்து பரித் தலைவர் ஜெயேஷ் குஜாரியா கொலை செய்யப்பட்டமை குறித்து விரைவான விசாரணை நடத்த வலியுறுத்த அவர்கள் அங்கு வந்ததாக தாலுக்க அலுவலகத் தலைவர் சௌத்ரி பிபிசியிடம் தெரிவித்தார்.

அரசு அலுகத்திற்குள் அவ்வாறு கோஷங்கள் எழுப்பியது முக்கியமான விடயமாகும். எனினும் இச்சம்பவம் குறித்து எதுவும் தனக்கு தெரியாது என சௌத்ரி கூறுகிறார்.

நான் அவர்களின் குறிப்பாணையை வாங்கச் சென்றேன். அங்கு சுமார் 50 பேர் இருந்தனர். ஆனால், கோஷங்கள் ஏதும் நான் கேட்கவில்லை என்கிறார் சௌத்ரி.

### கொலைக்கும், கோஷங்கள் எழுப்பியதற்கும் என்ன தொடர்பு?

மஹுவாவில் அக்டோபர் 23ஆம் திகதி, விஷ்வ இந்து பரிஷித்தின் தலைவர் ஜெயேஷ் குஜரியா, சிறுபான்மையினர் சமூகத்தை சேர்ந்த 4 இளைஞர்களால் கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த விசாரணை தொடர்பான குறிப்பாணையை அளிக்கவே உள்ளூர் பா.ஜ.க, வி.எச்.பி, பஜ்ரங் தல் அதிகாரிகள் தாலுக்கா அலுவலகத்திற்கு சென்றனர்.

அதனைத் தொடர்ந்து பரத்நகர் மாவட்டத்தின் வி. எச். பி. தலைவர் கிரித் மிஸ்ரி அங்கு உரையாற்றிய போது, முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக ஆத்திரமாக பேசினார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

### ‘இது தொடர்ந்து நடைபெறுகிறது’

அந்த உரையின் போது என்ன நடந்தது என்பதை தெரிந்து கொள்ள, அங்கிருந்த அஷோக் சோலங்கியை பிபிசி குஜராத்தி தொடர்பு கொண்டது. அவர் பாவ்நகர் மாவட்ட பா.ஜ.க குழுவின் உறுப்பினர் ஆவார். ’இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறும்’ என்று சாதாரணமாக அவர் கூறுகிறார்

அவர் மேலும் கூறுகையில், வி. எச். பி. தலைவரின் கொலை குறித்து விரைந்து விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்த தாலுகா அலுவலகத்துக்கு செல்லும் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வாட்சப்பில் செய்தி வந்தது. இதனால் தான் இந்து அமைப்பை சேர்ந்த பலரும் அங்கு திரண்டோம் என்றார்.

முஸ்லிம்களுடன் எந்த நிதி பரிமாற்றமும் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற கோஷங்கள் எழுந்தபோது அப்பகுதி பா.ஜ.க. தலைவர் சுரேந்திர சர்வயாவும் அங்கு இருந்தார்.

பேரணி அல்லது பொதுக்கூட்டத்தில் இவ்வாறு கோஷங்கள் எழுப்புவது வழக்கம். ஆனால், ஒரு சமூகத்துக்கு எதிராக சிலர் கோஷங்கள் எழுப்புவார்கள் என்பதை நாங்கள் அறியவில்லை என்று பி பி சியிடம் பேசிய சர்வயா கூறினார்.

பாவ்நகர் மாவட்ட பா.ஜ.க. கிஸன் மோர்ச்சாவின் தலைவர் சி பி சர்வயாவும் காணொலியில் இருந்தார். அந்த உரையில் யாரையும் தூண்டும் வகையில் எந்த பேச்சும் இடம்பெறவில்லை என்று பிபிசியிடம் சி. பி. சர்வயா கூறினார்.

குறிப்பாக வைரலான காணொலி குறித்து கேட்டபோது, அதை அவர் மாற்றிக் கூறினார். அதாவது ‘முஸ்லிம்களுடன் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ள வேண்டாம் என்றுதான் கூறப்பட்டது. யாரும் யாரையும் கொலை செய்ய சொல்லவில்லை’ என்றார்.

### இனவாத பதற்றத்தை உருவாக்க திட்டமா?

வைரலான வீடியோவை பார்த்த முஸ்லிம் சமூகத்தினர் கவலை அடைந்தனர். அதனையடுத்து பாவ்நகர் எஸ்.பியிடம் முஸ்லிம் தலைவர்கள் மனு அளித்துள்ளனர்.

அந்த மனுவை தயாரித்த முஸ்லிம் ஏக்தா மார்ச்சை சேர்ந்த இம்தியாஸ் பதன், முஸ்லிம்களுக்கு எதிராக பேசியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறுபான்மை சமூகத்தின் தலைவர் முஸ்தக் ெ மமன் பிபிசியிடம் பேசுகையில் –

தலாஜா நகரத்தின் மக்கள் தொகை சுமார் 30 ஆயிரம், அதில் 1500 பேர் முஸ்லிம்கள் என்றார்.

இங்கு இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். சில வெளிநபர்கள் இந்த அமைதியை கெடுத்து பிரச்சினை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் வரும் நேரங்களில் மட்டும் இந்து – முஸ்லிம் பிரச்சனை ஏற்படுவது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்புகிறார்.

முஸ்லிம் சமூகத்தினரிடம் இருந்து மனு அளிக்கப்பட்டுள்ளது. நான் உடனேயே விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளேன் என பாவ்நகர் எஸ்.பி பிரவீன் மல் தெரிவித்தார். (ஐ)

# மணிப்பூரில் நிலநடுக்கம்

புதுடில்லி, நவ. 08

மணிப்பூரில் நேற்றுப் புதன் கிழமை 4.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சண்டெல் உள்ளிட்ட பல பகுதிகளில் கட்டடங்கள் அதிர்ந்துள்ளன.

இந்தியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்குள்ளாகும் மாநிலங்களில் மணிப்பூர் மாநிலமும் அடங்கும். இதனைத் தொடர்ந்து மாநில தலைநகர் இம்பாலில் லேசான நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், சாண்டெல் பகுதியில் நேற்று அதிகாலை 4.20 மணியளவில் நிலநடுக்கமென்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.1அலகாக பதிவாகி உள்ளது. நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் லேசாக அதிர்ந்துள்ளன. எனினும், பெரிய அளவில் பாதிப்போ, உயிர்ச்சேதமோ ஏற்பட்டதாக தகவல் இன்னும் வெளியாகவில்லை.

இதேபோன்று சாண்டெல் மாவட்டத்தில் கடந்த ஜுலை மாதம் 17ஆம் திகித 3.2 ரிச்டர் அளவிலும், அதன்பிறகு 3.5 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இம்பாலில் ஜுன் 19ஆம் திகதியும் 4.4 ரிச்டரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன் சுராசந்த்பூர் மாவட்டத்தில் 3.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டொல்லியில் 18 வாகனங்களுக்கு தீ வைத்துத் தப்பி ஓடிய மர்ம நபர்!

டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 18 வாகனங்களுக்கு தீ வைத்து விட்டு தப்பி ஓடிய போதை ஆசாமியை – மர்ம நபரை – பொலிஸார் தேடி வருகின்றனர்.

தெற்கு டில்லியில் மடங்கிர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த 18 வாகனங்களுக்குப் போதை ஆசாமி என்ற மர்ம நபர் தீ வைத்த காட்சிகள் அங்குள்ள சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

அந்த மர்ம நபர் அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ள 6 மோட்டார் சைக்கிள்களுக்கும் முதலில் தீ வைத்துவிட்டு பின் அதன் அருகாமையில் இருந்து கார்களும் தீ பற்றிக்கொள்கின்றது. இந்தச் சம்பவம் பற்றி அறிந்ததும், அந்த இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் மர்ம நபரை கைது செய்ய முற்பட்டபோது அந்த நபர் தப்பி ஓடி விட்டார்.

இந்த நிலையில் தீ வைக்கப்பட்ட வாகனங்களில் 8 இரு சக்கர வாகனங்களும், 2 கார்களும் முற்றிலும் எரிந்து சேதமாகியுள்ளன. மேலும் 6 மோட்டார் சைக்கிள் மற்றும் 2 கார்கள் என்பவை பாதி எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளன.



இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கர்நாடகாவில் காங்கிரஸ் பெற்ற வெற்றி கோஹ்லியின் டெஸ்ட் வெற்றி போன்றது

## முன்னாள் நிதி அமைச்சர் சிதம்பரம் பெருமிதம்

புதுடில்லி, நவ. 08

கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி பெற்ற வெற்றி டெஸ்ட் போட்டிகளில் விராட் கோஜ்லி பெற்ற வெற்றிபோல் உள்ளது என முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

கர்நாடகம் மாநிலத்தில் 3 நாடாளுமன்றத் தொகுதிகள் மற்றும் 2 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த 2ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்தநிலையில் முன்னாள் நிதி அமைச்சரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான ப.சிதம்பரம் இது தொடர்பாக தனது டுவிட்டரில் பக்கத்தில் –

கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரஸ் ம.ஜ.த. பெற்ற வெற்றி டெஸ்ட் போட்டிகளில் விராட் கோஹ்லி பெற்ற வெற்றியைப் போல் உள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் கர்நாடக இடைத்தேர்தலில் காங்கிரஸ் ம.ஜ.த கூட்டணி கட்சி 4–1 என்ற கணக்கில் வென்றுள்ளது. இந்த வெற்றி விராட் கோஜ்லி தலைமையில் இந்திய கிரிக்கெட் அணி பெற்றுக்கொள்ளும் டெஸ்ட் தொடர் வெற்றிகளைப் போல் உள்ளது என தெரிவித்து இதில் கூட்டணி பலன் தந்துள்ளது எனவும் பதிவிட்டுள்ளார். (ஐ)

# அமெ. இடைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெற்றி

## ட்ரம்புக்கு கடும் பாதிப்பு






வாஷிங்டன், நவம்பர் 08

**அமெரிக்காவில் உள்ள பிரதிநிதிகள் சபைக்காக நடைபெற்ற இடைக்காலத் தேர்தலில் வென்றதன் மூலம் ஜனநாயக கட்சி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்கு கடும் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளது.**

பிரதிநிதிகள் சபைக்கான தேர்தலில் வென்றதன் மூலம் கடந்த எட்டு ஆண்டுகளில் முதல்முறையாக அந்நாட்டின் கீழவையை கைப்பற்றியுள்ள ஜனநாயகக் கட்சிக்கு இந்த வெற்றி அதிபர் டிரம்பின் முயற்சிகளை முறியடிக்கும் வாய்ப்பாக அமையக்கூடும்.

ஆனால், அதே வேளையில் செனட் சபையில் தனது பலத்தை அதிகரிக்க குடியரசுக் கட்சி முயலும்.

அமெரிக்க காங்கிரஸ் என்பது செனட் (மேலவை) மற்றும் பிரதிநிதிகள் சபை (கீழவை) என்ற இரு அவைகளைக் கொண்டது.

செவ்வாய்கிழமை நடந்த தேர்தல் வாக்கெடுப்பு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் ஆட்சிக் காலத்தின் மீதான வாக்கெடுப்பாக கருதப்பட்டது.

தேர்தல் சக்கரத்தில் பெண்களுக்கான ஆண்டு என்று கூறப்பட்ட நடப்பு ஆண்டில் பெண் வேட்பாளர்கள் பெரிதும் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளில் அமெரிக்காவில் நடந்த இடைத்தேர்தல்களில் இம்முறைதான் மிக அதிக அளவு வாக்குப்பதிவு நடந்திருக்கக்கூடும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

தொடக்கம் முதலே, இந்த இடைக்கால தேர்தலில் மிக அதிக அளவில் வாக்குப்பதிவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

முன்னதாக, இந்த இடைக்கால தேர்தல்களில், தனது கட்சியான குடியரசு கட்சிக்கு ஆதரவு சேகரிக்கும் கடைசி கட்ட முயற்சியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஈடுபட்டார்.

"நாளைய தேர்தல் நம் சாதனைகள் அனைத்துக்கும் பதில் கூறுவதாக அமையும்" என்று டிரம்ப் கடைசியாக நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசினார்.

இந்த இடைக்கால தேர்தல்களில், பிரதிநிதிகளின் முழு சபைக்கான 435 உறுப்பினர்களையும், 100 உறுப்பினர் கொண்ட செனட்டின் 33 உறுப்பினர்களையும் அமெரிக்க மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

அமெரிக்க காங்கிரஸ் என்பது செனட் (மேலவை) மற்றும் பிரதிநிதிகள் சபை (கீழவை) என்ற இரு அவைகளைக் கொண்டது. தற்போது அமெரிக்க மக்கள் தொகையில் 60 சதவிகிதமாக இருக்கும் வெள்ளை இனத்தை சேர்ந்தவர்கள் 80 சதவிகித உறுப்பினர்கள் என் கிறது அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப் புத் தரவுகள்.

அமெரிக்க மக்கள் தொகையில் கிட்டத்தட்ட சரி பாதியாக இருக்கும் பெண்களின் பங்களிப்பு அமெரிக்க காங்கிரஸில் வெறும் 20% மட்டுமே.

சிறுபான்மையின குழுக்களை சேர்ந்தவர்களில், ஹிஸ்பானிக், ஆசியர்கள், ஆபிரிக்க அமெரிக்கர்களின் பிரதிநிதித்துவம் காங்கிரஸில் குறைவான அளவில் இருக்கிறது.

இந்த புள்ளிவிவரங்கள் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் ஆராய்ச்சி கவுன்சிலால் சேகரிக்கப்பட்ட சுயவிவரத் தரவிலிருந்து (Profile data) பெறப்பட்டது. இதில், அமெரிக்க காங்கிர ஸில் பல்வேறு மக்கள் குழுக்களின் தற்போதைய பங்களிப்பை காட்டுகின்றன.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் தற்போது 45 ஹிஸ்பானிக் அமெரிக்கர்கள் மற்றும் 48 ஆபிரிக்க அமெரிக்கர்கள் உள்ளனர்.

பராக் ஒபாமா, அமெரிக்க செனட்டின் ஐந்தாவது ஆபிரிக்க அமெரிக்க உறுப்பினர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடகொரிய - கியூப நல்லுறவுப் பாலம் இரு நாட்டுத் தலைவர்களும் பங்கேற்பு

பியொங்யாங், நவ. 8

வடகொரியாவில் நடைபெற்ற 'ஒளிமயமான நாடு' என்ற பாரிய செயற்றிறன் நிகழ்வொன்றில் அந்நாட்டு தலைவர் கிம் ஜொங் உன் மற்றும் கியூப ஜனாதிபதி மிகுவெல் டயஸ் கனெல் ஆகியோர் இணைந்து பங்கேற்றுள்ளனர்.

நல்லெண்ண விஜயமாக கியூப ஜனாதிபதி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று வடகொரியாவுக்குச் சென்றுள்ளது.



இந்நிலையில், பியாங்யோங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் செயற்றிறன் நிகழ்வில் இரு நாட்டு தலைவர்களும் பங்கேற்றனர் வடகொரிய அரச ஊடகமான கே.ஆர்.டி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது. அது தொடர்பான காணொளியையும் வெளியிட்டுள்ளது.

இரு நாட்டு கொடிகளையும் அசைத்தவாறு பல வண்ணமயமான நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன. பார்ப்போரை கவரும் வகையில் மிகவும் பிரம்மாண்டமான வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வைப் பார்வையிட்ட இரு நாட்டு தலைவர்களும் கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியமையோடு, ஒருவரையொருவர் கட்டித்தழுவிக் கொண்டனர்.

வடகொரியாவும் கியூபாவும் கடந்த 1960ஆம் ஆண்டுமுதல் இராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றன. சோவியத் முறையிலான பொருளாதார முறைகளை கடைப்பிடிக்கும் உலகின் கடைசி இரு நாடுகளும் இவைதான்.

இந்நிலையில், இருநாடுகளுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையில் கியூப உயர் மட்ட விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணிநீக்கம் செய்யப்பட்ட ஆறு விமான ஊழியர்கள்



கடந்த மாதம் ஸ்பெயின் விமான நிலையம் ஒன்றின் தரையில் படுத்திருந்த புகைப்படம் வெளியான விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஆறு விமான ஊழியர்களைப் பணிநீக்கம் செய்துள்ளதாக ரியான் எயார் அறிவித்துள்ளது.

ஊழியர்களின் தவறான நடத்தை குறித்து நடத்தப்பட்ட விசாரணையில் விமான நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டமை உறுதி செய்யப்பட்டதால் அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 14ஆம் திகதி தங்களது விமானம் திருப்பி விடப்பட்டதால் ஸ்பெயினின் மலக்கா விமான நிலையத்தில் 20க்கும் மேற்பட்ட விமான ஊழியர்கள் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.



# உடலையாவது ஒப்படையுங்கள்

## ஜமாலின் பிள்ளைகள் சவுதியிடம் கோரிக்கை

மர்மமான முறையில் கொல்லப்பட்ட சவுதி நாட்டின் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கியின் உடலைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவரது பிள்ளைகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சவுதி அரசுக்கு எதிராக கட்டுரை எழுதி வந்த ஜமால் கசோக்கி, ஒரு மாதத்துக்கு முன் துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்திற்குச் சென்ற போது மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.

முதலில் இவர் காணாமல் போனதாகச் செய்தி பரவியது. கொலை என்பதை மறுத்து வந்த சவுதி, பின் இதனை ஒத்துக்கொண்டது. கொல்லப்பட்ட கசோக்கியின் உடல் பற்றி எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்நிலையில் இதுகுறித்து அவரது மகன்களான சலாஹ் மற்றும் அப்துல்லா, முதல்முறையாக வாஷிங்டனில் பத்திரிகைக்கு பேட்டியளித்துள்ளனர்.

இதில், எங்கள் தந்தை வீரம் மற்றும் துணிவு மிக்கவர். தந்தையின் உடல் கிடைக்காததால், அவருக்கான இறுதி மரியாதை செலுத்த முடியாத துக்கத்தில் எங்களது குடும்பம் உள்ளது. அவரது உடலை சவுதியின் மதினா நகரில் அடக்கம் செய்வதே எங்களது தற்போதைய விருப்பம்.

இது குறித்து சவுதி அதிகாரிகளிடமும் வலியுறுத்தியுள்ளோம். விரைவில் நல்லது நடக்கும் என நம்புகிறோம். எமது தந்தையின் கருத்துகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டன. அவர் அமைதி வழியில் நடக்கக்கூடியவர். அனைவராலும் விரும்பப்பட்டவர். எங்களுக்கு உரிய நீதி கிடைக்கும் என நம்புகிறோம் எனவும் அவர்கள் அப்பத்திரிகையிடம் கூறியுள்ளனர்.

இதேவேளை, பத்திரிகையாளர் கசோக்கி கொல்லப்பட்டு ஒன்பது நாட்களுக்குப் பின் ஒக்ரோபர் 11 ஆம் திகதி, அதற்குரிய ஆதாரங்கள் எதுவும் சிக்கிவிடாமல் அதனை முற்றிலும் அழிப்பதற்காக, கெமிக்கல் மற்றும் நச்சுத் துறை நிபுணர்கள் அடங்கிய 11 பேர் கொண்ட சிறப்பு படையைச் சவுதி துருக்கிக்கு அனுப்பியதாக துருக்கி பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவர்கள் விசாரணை அதிகாரிகள் என்ற பெயரில் அனுப்பப்பட்டு, ஒக்ரோபர் 17 ஆம் திகதி வரை தினமும் துருக்கியிலுள்ள சவுதி தூதரகம் சென்று ஆதாரங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்குள் இக்குழு மீண்டும் சவுதி திரும்பியதாகவும் துருக்கி பத்திரிகை செய்தி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# 10000 விளக்குகள் ஒளிரவிட்டு உலகப் போரில் உயிரிழந்தவர்களுக்கு இங்கிலாந்தில் அஞ்சலி!

முதலாம் உலகப்போரில் உயிரிழந்தவர்களுக்கு இங்கிலாந்தில் 10 ஆயிரம் விளக்குகளை ஒளிரவிட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வுக்காக லண்டன் சதுக்கம் ஆயிரக்கணக்கான விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பழங்காலக் கோட்டையின் மேலேறிய இராணுவ வீரர் ஒருவர், குழல் இசையை இசைத்து அஞ்சலி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தீப்பந்தம் ஏந்தி வந்த வீரர் ஒருவர் கோட்டையைச் சுற்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்களை ஏற்றியமையைத் தொடர்ந்து போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)

# தென்னாசியாவில் வலுவடைகின்றது ஆதிக்கப் போட்டி



சீனாமற்றும் இந்தியாவுக்கு இடையிலான தென்னாசியப் பிராந்தியத்தின் பூகோள – மூலோபாய போட்டியில், முக்கிய பங்கு தாரராகக் கருதப்படும் இலங்கையின்தற்போதைய அரசியல் குழப்பநிலையை, இவ்விரு நாடுகளும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திடீரென பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சிலநாள்களாக இலங்கை அரசியலில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

பிரதமர் பதவியிலிருந்து தான் நீக்கப்படுவதற்கு நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவு தேவை எனவும் இதனை இலங்கை ஜனாதிபதி உறுதிப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்தார்.

நாடாளுமன்றில் தனது கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள நிலையில் தன்னை பதவியிலிருந்து விலக்கியமை சட்டத்திற்கு முரணானது எனவும் இதனால் தன்னால் இலங்கை ஜனாதிபதியின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

கடந்த 30ஆம் திகதி, ரணில் விக்கிரமசிங்கவின் வதிவிடமான அலரி மாளிகைக்கு முன் கூடியிருந்த அவரது ஆதரவாளர்கள் மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர்.

சிறிசேன தனது வாக்குறுதியை மீறியுள்ளதாகவும் இவர் நிறைவேற்று அதிகாரத்தை தனது கையில் எடுத்துக் கொண்டுள்ளதாகவும் நாடாளுமன்ற அதிகாரத்தை ஓரங்கட்டிவிட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக 'ரொய்ட்டர் ஊடகம் குறிப்பிட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையானது, கடந்த சில ஆண்டுகளாக அதிபர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நிலவிய அதிகாரப் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தமையை உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் தற்போது நிலவி வரும் அரசியல் பிரச்சினையானது சுமூகமாக மாறும் போது எந்தக் கட்சி இங்கு ஆட்சியமைத்துக் கொள்ளும் என்பது தெளிவற்றதாகும். இலங்கையின் மூலோபாய அமைவிடம் காரணமாக இங்கு தற்போது நிலவி வரும் அரசியல் குழப்பநிலையானது பிராந்திய அதிகாரத்துவ நாடுகளான இந்தியா மற்றும் சீனாவால் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது.

'இலங்கையின் அண்மைய அரசியல் மாற்றங்கள் தொடர்பாக இந்தியா மிகவும் நெருக்கமாக அவதானித்து வருகிறது. இலங்கை தனது நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் அரசியல் சீர்திருத்தத்தை பின்பற்றும் என நம்புகிறோம்' என இந்தியாவின் வெளியுறவு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இந்தியாவானது இலங்கையில் தெளிவான அரசியல் சூழல் வரும் வரை காத்திருக்கும். தனது அயல்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்து கொள்வதில்லை என்கின்ற கோட்பாட்டை இந்தியா கொண்டுள்ளது. அயல்நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் அரசியல் தலைவர்களுடன் இணைந்து இந்தியா பணியாற்றும்' என இலங்கை வல்லுநரும் அவதானிப்பு ஆய்வு மையத்தின் சென்னைப் பிரிவின் இயக்குநருமான சத்திய மூர்த்தி சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தற்போதைய சூழல் வேறுபட்டதாகக் காணப்படுவதால் இது தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என இந்தியா கருதுவதாகவும் சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது. சீனாவின் ஆதரவாளராகக் கருதப்படும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டபோது இவரை வாழ்த்திய ஒரு சில நாடுகளில் சீனாவும் ஒன்றாகும்.



மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட பின்னர் சீனப் பிரதமரின் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதற்காக சீனாவின் தூதுவர் செங் ஷியுவான், மஹிந்த ராஜபக்ஷவை நேரடியாகச் சந்தித்திருந்தார்.

இலங்கையானது இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் பூகோள – மூலோபாயப் போட்டியில் மிக முக்கிய நாடாகக் காணப்படுகிறது. இந்தியாவானது இலங்கையுடன் மிக நீண்ட காலமாக அரசியல், கலாசாரம், பொருளாதாரம் மற்றும் இராணுவ உறவுகளைக் கொண்டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலும் இந்தியா தலையீடு செய்துள்ளது. குறிப்பாக 1987இல் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக இந்திய அரசால் இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் சீனா தனது இருப்பை பலப்படுத்தி வருகிறது. 2005-2015 வரை மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் அதிபராகப் பதவி வகித்த போது இலங்கையுடனான தனது நல்லுறவை சீனா வலுப்படுத்திக் கொண்டது. இலங்கையின் உள்நாட்டுப் போர் இறுதிக்கட்டத்தை அடைந்த போது, சீனாவினால் இலங்கைக்கு இராணுவ உபகரணங்கள் மற்றும் வெடிபொருட்கள் வழங்கப்பட்டன.

உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னர், அக்காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக அனைத்துலக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு சீனா தடையாக இருந்தது. இதன்மூலம் சீனாவிற்கும் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கும் இடையில் மேலும் நெருக்கம் ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கையின் கட்டுமானத் திட்டங்களுக்காக சீனாவால் பல பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டன.

2007இல், ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கட்டுவதற்கான உடன்படிக்கையானது மஹிந்த ராஜபக்ஷவினால் சீனாவுடன் கைச்சாத்திடப்பட்டது. கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் சீனாவிற்கு முதலீட்டு வலயத்தையும் ராஜபக்ஷ வழங்கியிருந்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் தென் கொள்கலன் முனையத்தை நிர்மாணித்து அதனை நிர்வகிப்பதற்கான அனுமதியானது 2010 இல் இலங்கை அரசால் சீனாவிடம் கையளிக்கப்பட்டது. 2013 இல், 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத் திட்டத்திற்கான ஒப்பந்தம் சீனாவினால் கைச்சாத்திடப்பட்டது. இத்திட்டமானது சீனா தனது பட்டுப்பாதைத் திட்டத்தை மேற்கொள்ளும் நோக்குடன் 2016ல் ஆரம்பிக்கப்பட்டது.

2013 நவம்பரில் 272 மில்லியன் டொலர் பெறுமதியான தொடருந்துப் பாதைத் திட்டமானது சீனாவால் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறான திட்டங்களை இலங்கையில் சீனா முன்னெடுத்த போது, இது தொடர்பில் இந்தியா அதிருப்தியடைந்தது. 2014 இல் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்றபோது இது இந்தியாவிற்கு எச்சரிக்கையை எழுப்பியது.

இலங்கையில் சீனாவின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்கு அதிகரித்தமையானது இந்தியாவிற்கு மேலும் கவலையை ஏற்படுத்தியது. இந்நிலையில் 2015 இல் இலங்கையில் இடம்பெற்ற தேர்தலில் எதிர்பாராத வகையில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, சிறிசேன நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். தனது தேர்தல் தோல்விக்கு இந்தியாவின் புலனாய்வு அமைப்பே காரணம் என ராஜபக்ஷ பழிசுமத்தியிருந்தார்.

சிறிசேன தனது தேர்தல் பரப்புரையின் போது, சீனாவில் தங்கியிருக்கும் நிலையைக் குறைப்பேன் என வாக்குறுதி வழங்கியிருந்தார். இவர் அதிபராகப் பதவியேற்ற பின்னர், இந்திய சார்புக் கொள்கையைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்தார். சிறிசேன அரசு இந்தியா மற்றும் சீனாவுடன் சமநிலையான உறவைப் பேணிக்கொண்டது.

எனினும் சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை அடைப்பதில் இலங்கை பல்வேறு நெருக்கடிக்கு உட்பட்டதால் இதிலிருந்து மீள்வதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் அதனுடன் இணைந்த 15000 ஏக்கர் நிலப்பரப்பையும் 99 ஆண்டுகால குத்தகைக்கு சீனாவிடம் கையளித்தது.

இலங்கையில் சீனாவிடம் அம்பாந்தோட்டை துறைமுகம் கையளிக்கப்பட்டதன் மூலம் இந்திய மாக்கடலில் சீனா தனது கடற்தளத்தை அமைத்துக் கொள்ளலாம் என்கின்ற அச்சம் இந்தியாவிற்கு ஏற்பட்டது.

இலங்கையின் மிகமோசமான நிதி நெருக்கடி காரணமாக கடந்த சில ஆண்டுகளாக சிறிசேன அரசாங்கம் சீனாவுடன் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்கிறது. இதன் காரணமாக, சிறிசேன ஆட்சிக்கு வந்தவுடன் இடைநிறுத்தப்பட்ட சீனத்திட்டங்கள் மீண்டும் தொடர்வதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், இந்தியாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படவிருந்த சில திட்டங்கள் தந்திரோபாய ரீதியாக தடைப்பட்டுள்ளன. குறிப்பாக திருகோணமலை துறைமுக அபிவிருத்தி, மத்தல விமான நிலையத்தை முகாமை செய்தல், கெரவலப்பிட்டிய இயற்கை எரிவாயுத் திட்டம் போன்ற இந்தியத் திட்டங்களை முன்னெடுப்பதில் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன.

' விக்கிரமசிங்க இந்திய ஆதரவாளர் என சில ஆய்வாளர்களால் நோக்கப்படுகிறது. இது பகுதியளவில் உண்மை. எனினும், இது இந்தியாவின் விருப்பில் மாற்றத்தைக் கொண்டு வருகிறதா அல்லது இல்லையா என்பது வேறு விடயம்' என சத்திய மூர்த்தி கூறுகிறார்.

'இந்திய ஆதரவுத் திட்டங்கள் இழுபறி நிலையில் உள்ளமைக்கு சிறிசேன மீது விக்கிரமசிங்க குற்றம் சுமத்தலாம். ஆனால் சீனாவின் கடன் சுமையைக் குறைப்பதற்கான அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு கையளிக்கும் நடவடிக்கையில் சிறிசேனவும், ரணில் விக் கிரமசிங்கவும் வேகமாகச் செயற்பட்டிருந்தனர்' என சத்திய மூர்த்தி குறிப்பிட்டார்.

இந்தியாவின் 'றோ' அமைப்பு தன்னைக் கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டுவதாக ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதற்கு சில நாட்களின் முன்னர் நாடாளுமன்றில் இலங்கை ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான தொலைபேசி உரையாடலின்போது சிறிசேன இக்குற்றச்சாட்டை நிராகரித்திருந்தார்.

அண்மையில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய முதலீட்டின் மூலமே அபிவிருத்தி செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்திய போது, இலங்கை அரசே இதனை முன்னெடுக்க வேண்டும் என சிறிசேன வாதிட்டிருந்தார்.

இவ்வாறான சூழலில் ஏற்பட்ட இலங்கையில் அரசியல் முறுகல் நிலையை இந்திய மாக்கடலில் தமது அதிகாரங்களை நிலைநாட்டுவதற்காக போட்டியிடும் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் நெருக்கமாக அவதானித்து வருகின்றன.

பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு போன்ற நாடுகள் உட்பட தென்னாசிய நாடுகளில் தமது செல்வாக்கை அதிகரிப்பதில் சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் போட்டி நிலை தற்போது மேலும் அதிகரித்துள்ளது.

**வழிமூலம் - DW**

**மொழியாக்கம் - நித்தியபாரதி**

# நல்லாட்சியில் தமிழருக்கு நன்மையே கிட்டவில்லை

## சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



வவுனியா, நவ. 08

**நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ, அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும் செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

**கடந்த மூன்றரை வருடமாக தாங்கள் ஆதரவு தெரிவித்த நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்கள் பிரச்சினைகளை எவ்வாறு கையாண்டுள்ளது என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசு என்ற பெயரில் கடந்த மூன்றரை ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அரசு தமிழருக்கோ அல்லது தமிழர் நலனுக்கோ எதுவும் செய்யவில்லை. மாறாக தமிழ் இனத்தை ஏமாற்றும் செயலிலேயே கடந்த அரசு செயற்பட்டது.

அதேநேரம் அந்த அரசோடு இணைந்து செயற்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இந்த வருடத்துக்குள் தீர்வு கிடைக்கும் எனத் தொடர்ச்சியாகக் கூறி வந்தது.

ஆனாலும் தமிழருக்கு எதுவும் கிடைக்கவில்லை. நிபந்தனையுடன் அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய நாங்கள் தொடர்ச்சியாகக் கோரி வந்தோம். அவர்கள் எதனையும் கேட்டதாக இல்லை. மாறாக அவர்கள் முழுமையாக என்னை ஒதுக்கினர்.

2015 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றமானது நாட்டின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை மட்டுமே மூலதனமாக வைத்து இலங்கையை ஆட்சிசெய்யும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வேறுவழியின்றிக் கைகோத்து ஆட்சிப்பீடம் ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இதுவரை காலமும் ஒரு கட்சி தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதங்களை மற்றொரு கட்சி எதிர்த்து வந்தது. சர்வதேச தலையீட்டின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் இலங்கையுடனான சர்வதேச சமூகத்தின் இராஜதந்திர உறவுகள் சுமுகமாக்கப்பட்டதுடன் எமது பிரச்சினைகளை அனைவரும் மெல்ல மெல்ல கைவிடத் தொடங்கிவிட்டனர்.

யுத்தக்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறலுக்குக் கலப்பு பொறிமுறை ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரண்டு வருட கால அவகாசத்தை இந்த அரசு பெற்றுக்கொண்டது. இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படாத நிலையில் மேலும் இரண்டாண்டு கால நீடிப்பையும் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் அரசு பெற்றுக்கொண்டது.

யுத்தம் முடிவுற்றவுடன் இயல்பாகவே மக்களின் காணிகளை மக்களிடம் கையளிப்பதையே ஏதோ காணி இல்லாத மக்களுக்குப் புதிதாக காணிகளை வழங்குவதைப்போல விளம்பரம் செய்தது.

பெயருக்கு சில அரசியல் கைதிகளைப் பிணையில் விடுவித்துவிட்டு கைதிகளின் விடயத்தில் அக்கறை செலுத்துவதுபோல் நடித்தது. அடுத்துவரும் மார்ச் மாதத்துடன் காலநீடிப்பு வழங்கிய இரண்டு ஆண்டு காலமும் முடிவடையும் நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் செயற்பட ஆரம்பித்ததுபோல் நாடகமாடுகிறது.

யுத்தத்தின்போது எமது மக்களின் வீடுகளை இடித்து அழித்துவிட்டு அதனைக் கட்டிக்கொடுப்பதாக நாடகமாடுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எமது ஆதரவைச் சில நிபந்தனைகளுடன் வழங்கவேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உதாசீனம் செய்தார். அதன் விளைவை இன்று தமிழ்த்தேசிய இனம் அனுபவிக்கின்றது.

அத்துடன், புதிய அரசியல் யாப்பினூடாக தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வு வரப்போகிறது, நாம் முன்வைத்த இணைந்த வடக்கு–கிழக்கில் சுயாட்சி கிடைக்கப் போகிறது, அதனை எதிர்காலத்தில் அமையக்கூடிய எந்த அரசினாலும் மாற்றமுடியாத நிலை உருவாகும் என்று சொல்லியே ஏனைய விடயங்களைப் பிற்போட்டு மைத்திரி–ரணில் அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது.

இதேபோல், புதிய அரசியல் யாப்பினூடாகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை உருவாகும் என்ற உத்தரவாதம் எம்மால் குழம்பிவிடக் கூடாது என்ற அடிப்படையிலேயே நாம் கூட்டமைப்புக்குள் விமர்சனங்களை முன்வைத்து ஒற்றுமையுடன் செயற்பட்டோம்.

இருப்பினும் கடந்த மூன்றாண்டுகளாகவே பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதையும் வடக்கு–கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதையும் கண்டித்து நாம் வரவு–செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களித்து வந்துள்ளோம்.

2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மேலும் இரண்டாண்டு காலம் நீடிப்பை வழங்க வேண்டாம் என்று நாம் விடுத்த கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஏற்காததால் எமது கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட நானும் ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளிவந்த அரசியல் யாப்பின் இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் எத்தகைய விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை என்பதை எமது கட்சியின் சார்பில் அறிக்கையாக வெளியிட்டிருந்தோம்.

அதன் காரணமாகவே இன்றுவரை எனக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு எதிர்க்கட்சித் தலைவரினால் மறுக்கப்பட்டு வருவதை நாடே அறியும். ஒட்டுமொத்தத்தில் எமது கொள்கை நிலைப்பாடு சரியானதே என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது. ஜனநாயகத்தில் எண்ணிக்கை பெரும்பான்மையின் முடிவுகள் எப்போதும் சரியானதாக இருக்காது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது–என்றார். (ஐ)

---

# இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் திட்டமிட்டபடி வழங்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 08

யுத்தம் மற்றும் வன்செயல்கள் காரணமாக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த மக்களின் ஒரு தொகுதியினருக்கு இழப்பீட்டுக்கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு நடைபெறும் என மீள்குடியேற்றம், புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் 320 பேருக்கும் ,கிளிநொச்சியில் முற்பகல் 10.30 மணிக்கு கூட்டுறவு மண்டபத்தில் 300 பேருக்கும் ,யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் 170 பேருக்குமான இழப்பீட்டுக் காசோலைகள் திட்டமிட்டபடி வழங்கி வைக்கப்படவுள்ளன.

எனவே காசோலைகளைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட்டுள்ள பயனாளிகள் குறித்த நேரத்திற்கு குறிப்பிட்ட இடத்திற்கு வருகைதந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.




அதேவேளை, இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து தேவைகள் மற்றும் கோரிக்கைகளுடன் சந்திக்க வரும் மக்களையும் சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது–என்றார். (ஐ)

---

# ஜனநாயகத்தை ஏற்படுத்தக் கோரி கொழும்பில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

## ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில்

கொழும்பு, நவ. 08



நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டி நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ராஜித மேலும் கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு பல சர்வதேச நாடுகளும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியா அபார வெற்றி



ரி-20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 71 ஓட்டங்களால் வென்றது இந்திய அணி .

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி, டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, இந்தியா சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர்களில் விளையாடுகின்றது.

இந்நிலையில் இந்த சுற்றுப்பயணத்தில் முதலாவதாக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியக் கிரிக்கெட் அணி, 2-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இதனைதொடர்ந்து, நடைபெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும், இந்திய அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தற்போது இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், நடைபெற்று வருகின்றது.

இதன் முதல் ரி-20 போட்டியில், இந்தியா அணி ஐந்து விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

லக்னெவ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ரோஹித் சர்மாவின் சதத்தின் துணையுடன், 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 195 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது, அணித்தலைவர் ரோஹித் சர்மா, அதிரடியாக துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 111 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

இதன்போது 61 பந்துகளை எதிர்கொண்ட ரோஹித் சர்மா, 7 சிக்ஸர்கள், 8 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 111 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் கெர்ரி பியர் மற்றும் பெபியன் அலென் ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

ரோஹித் சர்மா இதன்போது பெற்றுக் கொண்ட சதமானது, ரி-20 போட்டிகளில் அதிக சதங்கள் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமாக பதிவு செய்யப்பட்டது. அவர் இதுவரை 4 சதங்கள் அடித்துள்ளார்.

இதுதவிர அணித்தலைவராக இரண்டு சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற பெருமையும் ரோஹித் சர்மாவே சாரும்.

அத்தோடு இந்தியா அணி சார்பில், ரி-20 போட்டியொன்றில் அதிக சிக்ஸர்கள் விளாசிய ஐந்தாவது வீரர் என்ற பெருமையும் ரோஹித் சர்மா தன்வசப்படுத்தினார். இதே பட்டியலில் ரோஹித் சர்மா தான் 10 சிக்ஸர்களுடன் முதலிடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனைதொடர்ந்து 196 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 124 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இந்திய அணி 71 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில், 2-0 என இந்தியா அணி, முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இதன்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில், டேரன் பிராவோ 23 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டமாகப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் புவனேஸ்வர் குமார், காஹீல் அஹமட், ஜஸ்பிரிட் பும்ரா, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா, தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டி, எதிர்வரும் 11ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ளது.

# கிரிக்கெட் ஆலோசனை குழுவில் ஹத்துருசிங்க



இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சரின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இலங்கைக் கிரிக்கெட் சபையால் அமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் ஆலோசனைக் குழுவில், இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் சந்திக ஹத்துருசிங்க இடம்பெற்றுள்ளார்.

ஹத்துருசிங்க தவிர, ஏழு பேர் கொண்ட இந்தக் குழுவில், இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி அஷ்லி டி சில்வா, இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாளர் கிரேமி லப்ரோய், இலங்கை கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் விவகாரங்களுக்கான பிரதம அதிகாரி அசங்க குருசிங்க, இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஜெரோம் ஜெயரத்ன, எஸ்.எஸ்.சி கழகத்தின் மைக்கல் டி சொய்ஸா, கென்டி அல்விஸ் உள்ளிட்டோரும் இடம்பெற்றுள்ளனர்.

# முதல் டெஸ்டிலேயே சதமடித்த இங்கிலாந்தின் பென் போக்ஸ்



இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணியின் அறிமுக வீரர் பென்போக்ஸ் சதமடித்துள்ளார்.

காலியில் இடம்பெறும் முதலாவது டெஸ்டில் அவர் சதம் பெற்றுள்ளார். இரண்டாவது நாளான நேற்று பென்போக்ஸ் 202 பந்துகளில் 107 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி திணறிக்கொண்டிருந்தவேளை அவர் சாம் குரான் அடில் ரசீட் ஆகியவர்களுடன் இணைந்து இங்கிலாந்து அணியை பலப்படுத்தினார்.

சாம் குரானுடன் இணைந்து 88 ஓட்டங்களை பெற்ற பென்போக்ஸ் பட்லருடன் இணைந்து 61 ஓட்டங்களையும் அடில் ரசீத்துடன் இணைந்து 54 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

முதல் நாள் மதிய போசன இடைவேளைக்கு முன்னதாக பட்லருடன் இணைந்து போக்ஸ் முதிர்ச்சியையும் நிதானத்தையும் வெளிப்படுத்தியதுடன் ஓட்டங்களை மெதுமெதுவாக பெறத்தொடங்கினார்.

அவர் தனது 44 ஆவது பந்திலேயே முதல் பவுண்டரியை பெற்றார்.


பென்போக்சின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்சில் 342 ஓட்டங்களை பெற்றுள்ளது.

தனது முதல் டெஸ்டில் சதம்பெற்றதன் மூலம் இங்கிலாந்து அணிக்காக முதல் டெஸ்டில் சதம் பெற்ற விக்கெட் காப்பாளர்கள் வரிசையில் பென் போக்ஸ் இணைந்துகொண்டுள்ளார்.

இதேவேளை தனது இனிங்ஸ் குறித்து கருத்து தெரிவித்துள்ள பென்போக்ஸ், இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் அலைஸ்டர் குக்கின் வீடியோ செய்தியொன்றேதனக்கு உத்வேகத்தை அளித்தது என குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான வீடியோ செய்தியை வெளியிடுமாறு குக்கிக்கிற்கு தெரிவித்தது யார் என்பது தெரியாது. ஆனால் அது மிகச்சிறந்ததாக காணப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் அனைவரும் அதனைப் பார்த்தோம். உத்வேகம் பெற்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# லிவர்பூல் அதிர்ச்சித் தோல்வி

ஐரோப்பாவிலிருக்கும் உயர்தர உதைபந்து கழகங்களுக்காக நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

இதில் 11 முறை சம்பியன் அணியான ரியல் மட்ரிட் அணி, ஐந்து முறை சம்பியனான பார்சிலோனா அணி, அட்லெடிகோ மெட்ரிட் அணி, ஜுவென்டஸ், மென்செஸ்டர் யுனைட், பரிஸ் செயின்ட் ஜேர்மைன், லிவர்பூல் என 32 முன்னணி அணிகள் இத்தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இதில் எட்டு குழுக்கள் பிரிக்கப்பட்டு அதில் நான்கு அணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று முன் தினம் ரெட் ஸ்டார் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், ரெட்ஸ்டார் பெல்கிரேட் அணியும், லிவர்பூல் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களின் உச்சக்கட்ட பரபரப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், பலம் பொருந்திய வீரர்களை கொண்ட லிவர்பூல் அணி, ரெட்ஸ்டார் பெல்கிரேட் அணியிடம் 0-2 என்ற கோல்கள் கணக்கில் தோல்வியடைந்தது.

இப்போட்டியில் லிவர்பூல் அணி எளிதாக வெற்றியைப் பதிவு செய்யும் என பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்புக்களை ரெட்ஸ்டார் பெல்கிரேட் அணி தவிடுபொடியாக்கியது.

ஆரம்பம் முதலே லிவர்பூல் அணிக்கு ரெட் ஸ்டார் பெல்கிரேட் அணி கடும் சவால் அளித்தது. இதற்கமைய போட்டியின் 22ஆவது நிமிடத்தில் ரெட் ஸ்டார் பெல்கிரேட் அணியின் நட்சத்திர வீரரான மிலான் பாவ்கோவ் அணிக்காக முதல் கோலை பெற்றுக் கொடுத்து, அரங்கில் குழுமியிருந்த இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

இதன்பிறகு லிவர்பூல் அணி, பதில் கோல் போட கடுமையாக முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை.

ஆனால் மறுபுறத்தில் சளைக்காமல் ஆக்ரோமாக விளையாடிய ரெட்ஸ்டார் பெல்கிரேட் அணி, 29 நிமிடத்தில் மைலான் பாவ்கோவ்வின் துணையுடன் இரண்டாவது கோலை புகுத்தியது.

இதனால் ரெட் ஸ்டார் பெல்கிரேட் அணி, 2-0 என்ற கணக்கில், முற்பாதியில் முன்னிலைப் பெற்றது.

இதனைதொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியில், இரு அணி வீரர்களும் இரு மடங்கு ஆக்ரோஷத்துடன் விளையாடினர். எனினும் கோல் போடும் வாய்ப்பு எந்த அணிக்கு பலனளிக்கவில்லை.

இதனால் போட்டியின் இறுதியில் ரெட்ஸ்டார் பெல்கிரேட் அணி, 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று, லிவர்பூல் அணிக்கு அதிர்ச்சி அளித்தது.

குழு 'சி' யில் இடம்பெற்றுள்ள லிவர்பூல் அணி, நான்கு போட்டிகளில் விளையாடி இரண்டு வெற்றி, இரண்டு தோல்வி என ஆறு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ரெட் ஸ்டார் பெல்கிரேட் அணி, நான்கு போட்டிகளில் விளையாடி ஒன்றில் வெற்றி, ஒன்றில் தோல்வி, இரண்டில் சமநிலை என 4 புள்ளிகளுடன் நான்காவது அதாவது இறுதி இடத்தில் உள்ளது.

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன, நம்பிக்கையுடன் வாக்களித்த மக்களை ஏமாற்றித் தற்போது வரலாற்றுத்தவறொன்றை இழைத்துள்ளார்.

– இவ்வாறு நேற்றுச் சாடினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவையோ மஹிந்தவுக்கு எதிர்ப்பையோ கூட்டமைப்பு கொடுக்கவில்லை. மாறாக அரசமைப்புக்கு முரணான செயற்பாட்டை எதிர்த்து எங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையிலேயே தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

மாவிட்டபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலை ஊடகங்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஒரு மோசமான ஆட்சி நடைபெறுவதால் அதனை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி பெற வைக்கப்பட்டார். இவ்வாறு பொது வேட்பாளராக வந்தபோதும் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து அல்லது அதனை மறுதலிக்கின்ற வகையில் அவருடைய தற்போதைய செயற்பாடு அமைந்துள்ளது.

அதிலும் குறிப்பாகக் கடந்த மாத இறுதியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கிப் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்திருக்கின்றார். ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடுகள் அரசமைப்பை மீறும் சட்டத்துக்கு முரணானவையாகவே காணப்படுகின்றன. இது ஜனநாயக விரோதச் செயற்பாடு என்பதனாலேயே ஜனாதிபதியின் செயற்பாட்டை தற்போது பலரும் எதிர்த்து வருகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள் மற்றும் அநீதிகளுக்கு எதிராகவே மைத்திரிபால சிறிசேனவுக்கு நம்பிக்கையுடன் வாக்களித்திருந்தனர். ஆனால் எங்களது மக்களின் ஆதரவைப் பெற்ற மைத்திரிபால சிறிசேன இன்று மீளவும் மஹிந்தவை நியமித்திருப்பது தான் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

நாம் பல்வேறு எதிர்பார்ப்புடன் ஆதரவு தெரிவித்து எமது மக்கள் வாக்களித்துக் கொண்டுவந்த மைத்திரிபால சிறிசேனவின் இத்தகைய செயற்பாடுகள் துக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அதுவும் சட்டத்துக்கு முரணாக ஜனநாயக மரபுரிமையை மீறுகின்ற செயற்பாடுகளையே அவர் மேற்கொண்டிருக்கிறார்.

ஆகவே தான் எங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையில் நாம் ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம். அந்தத் தீர்மானம் என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவானதோ அல்லது மஹிந்தவுக்கு எதிரானதோ அல்ல. நாங்கள் யாரையும் ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை. அரசமைப்பை மீறி ஜனநாயகத்துக்கு விரோதமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டையே எதிர்க்கிறோம் – என்றார். (ஐ–07)

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன முன்னிலையில் பதவியேற்றார். அத்துடன், எஸ்.பி. திசாநாயக்க, பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்றார்.

பவித்திரா வன்னியாராட்சி, பெற்றோலிய வளங்கள் இராஜாங்க அமைச்சராகவும் பதவியேற்றார்.

அதேவேளை, கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர்களான மஹிந்த சமரசிங்கவும், கெஹலிய ரம்புக்வெலவும், எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன்னதாக, அனைத்து அமைச்சர்களும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தனர்.

13 அமைச்சுக்களுக்கான அமைச்சர்கள் நியமிக்கப்படாமல் இருப்பது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே அவர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர். (ஐ)

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

புதிய கட்சியை ஆரம்பித்திருப்பதால் அவர் தாமாகவே கட்சியிலிருந்து விலகியதாகவே கருதப்படுவார் என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நீதியரசராக இருந்த விக்கினேஸ்வரன் கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகக் கொண்டுவரப்பட்டார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் இணைந்து அவரைக் கொண்டு வந்தன. அவர் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாண சபையின் ஐந்து வருட ஆட்சிக் காலத்தின் இடையில் விக்கினேஸ்வரனுக்கும் கூட்டமைப்புக்கும் இடையே குறிப்பாகத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு மிடையே முரண்பாடுகள் வலுவடைந்தன.

இந் நிலையில் மாகாண சபையின் காலம் முடிவடைவதற்கு முன்னர் தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய கட்சியொன்றை அமைத்தார் விக்கினேஸ்வரன்.

அந்தக் கட்சியை ஆரம்பிக்க உள்ளதாக அறிவிப்பதற்கு முன்னர் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக அந்தக் கட்சியின் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் தலைவர் ஆகியோருக்கு விக்கினேஸ்வரன் கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தில், தன்னை அரசியலுக்குக் கொண்டு வந்தமைக்கு நன்றி தெரிவித்திருக்கும் விக்கினேஸ்வரன், தன்னைக் கட்சி உறுப்பினராகப் பார்க்காது தனக்கு எதிரான செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையினால் தான் அந்தக் கட்சியில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்வதாகவும் அறிவித்திருக்கிறார்.

இவ்விடயம் தொடர்பில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் கேட்டபோது –

மாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் விக்கினேஸ்வரன் போட்டியிட்டிருந்தார். அவர் தற்போது கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கின்றார்.

ஆனால் அவர் அண்மையில் ஒரு புதிய கட்சியொன்றையும் ஆரம்பித்திருந்தார். அவ்வாறு கட்சி ஆரம்பித்ததனூடாக அவர் தாமாகவே கட்சியிலிருந்து விலகியதாகக் கருதப்படுவார். அவ்வாறு புதிய கட்சியை ஆரம்பித்த விக்கினேஸ்வரன் மீதோ அல்லது அவருடைய செயற்பாடுகள் மீதுதோ எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆகவே அவர் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்து புதிய கட்சியை ஆரம்பித்துள்ள நிலையில் அவர் தாமாகவே கட்சியிலிருந்து விலக்கப்படுகின்றார் – என்றார். (ஐ–07)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தால் இலங்கை மீதான சர்வதேசத்தின் மதிப்பு குறைவடையும்

– இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், ஹீதர் நுவேட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டி அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்துகின்றோம்.

மேலும் தாமதித்தல் இலங்கை மீதான சர்வதேசத்தின் மதிப்பைக் குறைக்கிறது. அத்துடன் நல்லாட்சி, உறுதிப்பாடு மற்றும் செழிப்பு ஆகிய மக்களின் வேணவாக்களும் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை மீறி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதி இறங்கியுள்ளார் எனவும், இன்று பாலும் இன்று (நேற்று) நள்ளிரவு சபையைக் கலைக்க ஜனாதிபதி உத்தேசித்துள்ளார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், புதிய அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் எம்.பிக்களையும் ஜனாதிபதி செயலகத்துக்கு இன்று மாலை அவசரமாக அழைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்களுடன் முக்கிய பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

இதன்போது, 113 உறுப்பினர்களின் பெரும்பான்மைப் பலம் எங்களிடம் உள்ளது. அதனை நாடாளுமன்றத்தில் நிரூபித்துக் காட்டுவோம். எக்காரணம் கொண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பில் ஐ.தே.கவினர் கட்டுக்கதைகளை வெளியிட்டு வருகின்றனர். இதனை எவரும் நம்பவேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் மஹிந்தவும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று வெளியாகிய செய்தியில் எந்த உண்மையும் இல்லை என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நாடாளுமன்று கலைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்ற பொய்யான வதந்திகளை பரப்புவதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட சில குழுக்கள் வேலை செய்கின்றன.

தவறான மற்றும் ஆதாரமில்லாத இந்தப் பரப்புரை முற்றிலும் நிராகரிக்கப்படுகிறது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அலரி மாளிகையில் இன்று பிற்பகல் செய்தியாளர்களைச் சந்தித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும், நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து முகநூலில் நேரலையில் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேராவும், நாடாளுமன்றை நேற்று நள்ளிரவுடன் கலைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்ற தகவலை வெளியிட்டனர். (ஐ)

## வெளிநாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

இலங்கை அரசில் கடந்த ஒருவார காலமாகச் சதிப்புரட்சியே இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு ஜனநாயகத்துக்கு முரணாக தற்போது நடைபெறும் அரசியல் செயற்பாடுகள் முன் கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படைத்தன்மை, ஒழுக்கம், நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்பட்டுவருகின்றார்.

மேலும் நல்லாட்சியில் நிலை நிறுத்துவதாக ஜனாதிபதி கூறிய அனைத்து விடயங்களுக்கும் முரணாகச் செயற்பட்டுவருகின்றார்.

அதாவது ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் சதிப்புரட்சியில் ஜனாதிபதி மற்றும் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஈடுபட்டு வருகின்றனர் எனக் குறிப்பிடப்பிட்டுள்ளது. (ஐ)

## ஆட்சிமாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படபோவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை குறித்து கருத்து வெளியிடுகையிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசமைப்பின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அதுவே சிறந்த வழியாக இருந்திருக்கும். தனக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கின்றது என்பதால்தான் மஹிந்த இந்த விவகாரத்தில் இறங்கினார். இல்லையேல் அவர் களமிறங்கியிருக்கமாட்டார். எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றின் ஊடாக இப்பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம்.

புதிய அரசில் அமைச்சுப் பதவியை ஏற்கப்போவதில்லை. ஆடை அணிந்துகொண்டு அவ்வாறு செய்யமுடியாது. மஹிந்த பிரதமரானது மகிழ்ச்சி. அவருக்கு ஆதரவு வழங்குவேன். சார்பாக வாக்கும் அளிப்பேன். ஆனாலும், எதிரணியில் அமர்ந்து சுயாதீனமாகவே இயங்குவேன் – என்றார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்ககூடாது என வெல்கம வெளிப்படையாக அறிவித்து வந்ததால், கூட்டு எதிரணி உறுப்பினர்கள் அவருக்கு எதிராகப் பிரசாரம் செய்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வியாழேந்திரனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழேந்திரனை மீளவும் கட்சியில் இணைத்துக் கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.

பிரதி அமைச்சர் பதவியை வியாழேந்திரன் இராஜினாமாச் செய்துவிட்டு மீளவும் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளலாம் எனத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் அறிவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன என ஊடகவியலாளர்கள் மாவை எம்.பியிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர்–

எமது கட்சியிலிருந்து அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ள வியாழேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றபோது அவருடைய பதவியையே அவர் இழக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

ஆகவே அவர் திரும்பி வருவது அல்லது அவரை இணைத்துக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. அவ்வாறு அவர் திரும்பி வந்தால் இணைத்துக் கொள்வதென யாரேனும் கூறியிருந்தால் அது தவறு. அவர் வந்தாலும் வரவிட்டாலும் அவரைக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப் போவதில்லை – என்றார். (ஐ–07)

## நடுநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), த.சித்தார்த்தன் (புளொட்), எம்.ஏ.சுமந்திரன் (தமிழரசுக் கட்சி) ஆகியோர் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடைபெற்றன.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் குழப்பநிலைமை தொடர்பில் மிக நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமை, புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்தமை என்ற சில முடிவுகள் எடுக்கப்பட்டதன் பின்னணி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினருக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்காமல் எதிர்த்து வாக்களிக்குமாறு கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். அல்லது வாக்கெடுப்பின் போது நடுநிலை வகிக்குமாறும் அவர் கோரினார். எனினும், ஜனாதிபதியின் கோரிக்கைகளை அடியோடு நிராகரித்த கூட்டமைப்பினர், அரசமைப்புக்கு முரணாக நியமிக்கப்பட்டுள்ள புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாடாளுமன்றத்தில் தாம் எதிர்ப்போம் எனவும், அவருக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகவே தாம் வாக்களிப்போம் எனவும் தெரிவித்தனர்.

எனினும், நடுநிலையாவது வகிக்குமாறு கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவினராலும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்களைக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழுவினர் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினர்.

இந்தத் தீர்மானங்கள் ஏற்கனவே பகிரங்கமாக முழு நாட்டுக்கும் உலகுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன எனவும், தாம் ஏற்கனவே எடுத்த தீர்மானங்களை மாற்ற முடியாது எனவும், அந்தத் தீர்மானங்களின்படியே தாம் செயற்படுவோம் எனவும் ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கிக் கூறினர்.

நாடாளுமன்றத்தை இம்மாதம் 14ஆம் திகதி வரை ஒத்திவைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், பெரும்பான்மையான எம்.பிக்களின் எழுத்துமூல வேண்டுகோளுக்கிணங்க சபையை முற்கூட்டியே கூட்டுவதற்கு அனுமதிக்குமாறும் இதன்போது ஜனாதிபதியிடம் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

இந்த வேண்டுகோளை தான் கவனமாக ஆராய்வார் என ஜனாதிபதி உறுதியளித்தார். (ஐ)

# இப்போதும் நானே நாட்டின் பிரதமர் மைத்திரியின் செயல் சட்டவிரோதம்

கொழும்பு, நவ. 08

இலங்கையின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதவி நீக்கம் செய்துவிட்டார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்து பத்து நாள்களுக்குமேலாகிவிட்டன. ஆனால், தன்னைப்பதவிநீக்கம்செய்யநாடாளுமன்றத்தால் மட்டுமே முடியும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதைய அரசியல்குழப்பநிலை குறித்து பி.பி.சி. தமிழோசைக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய செவ்வி வருமாறு:

கே. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த நடவடிக்கை உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கியதா?

ப. இந்த நடவடிக்கையை அவர் நவம்பர் மாதத்தில்தான் எடுப்பார் என எதிர்பார்த்தோம். இப்போது எடுப்பார் என நினைக்கவில்லை.

கே. 2015 நாடாளுமன்றத் தேர்தல் வாக்கிலேயே உங்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றின எனச் சொல்லப்பட்டது. ஜனாதிபதி இம்மாதிரி நடந்துகொள்வார் என எதிர்பார்த்தீர்களா?

ப. நவம்பர் இரண்டாம் வாரத்தில் இப்படி நடக்கலாம் என எதிர்பார்த்தோம். நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் பெரிய கருத்து வேறுபாடுகள் இல்லை. அதற்குப் பிறகு பல விடயங்களில் ஒப்புதல் இருந்தது. சில விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தன.

கே. உங்களை நீக்கிய பிறகு நீங்கள் ஏன், உயர்நீதிமன்றத்தை அணுகவில்லை?

ப. இல்லை. இதனை நாடாளுமன்றம்தான் முடிவுசெய்ய வேண்டும். பிரதமர் என்பவர் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவர். இலங்கையில் இதனை நாடாளுமன்றம்தான் முடிவுசெய்யும். நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்தை நாங்கள் நம்புகிறோம். இதில் அரசியல் சாசனம் மிகத் தெளிவாக இருக்கிறது. யாரிடம் பெரும்பான்மை இருக்கிறதோ, அவரே நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவர்.

கே. பிரதமரை நீக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாக ஜனாதிபதி சொல்கிறார்..

ப. நாங்கள் அதை ஏற்கவில்லை. நாடாளுமன்றம்தான் அதை முடிவு செய்யும். பெரும்பான்மை இருப்பதாக ஒருவர் சொன்னால் அதை அவர் நிரூபித்தாக வேண்டும். அதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம்.

கே. முன்னதாக சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் உங்கள் கட்சியின் துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் பிரதமராக்க முயன்றதாகவும் அவர்கள் மறுத்துவிட்டனர் எனவும் ஜனாதிபதி கூறியிருக்கிறார். அவர்கள் இது குறித்து உங்களிடம் சொன்னார்களா?

ப. மறைமுகமாகச் சொன்னார்கள்.

கே. நீங்கள் மேலை நாடுகளுக்கு ஆதரவான நபர் என்றும் வெளி சக்திகளுக்கு ஏற்ற வகையில் செயல்படுபவர் என்றும் உங்களைச் சித்திரிக்கிறார் ஜனாதிபதி..

ப. இலங்கை நிலவரத்திற்கு ஏற்றபடிதான் நான் செயல்படுகிறேன். ஆனால், மேலை நாடுகள், இந்தியா, சீனா, ஜப்பான், மத்திய கிழக்கு நாடுகளுடன் நல்லுறவை பேணுகிறோம். எங்களுக்கு எதிரிகள் இல்லை.

## ரணில் தொடர்ந்தும் விடாப்பிடி



கே. உங்களுடைய மூன்றாண்டு கால ஆட்சியில் முக்கியமான முடிவுகள் உங்களைச் சுற்றியிருந்தவர்களால்எடுக்கப்பட்டனஎன்றும்அமைச்சரவை முடிவெடுக்கவில்லையென்றும் ஜனாதிபதி குற்றம்சாட்டியிருக்கிறார்.

ப. இல்லை. எல்லா முடிவுகளுமே ஜனாதிபதியாலோ, அமைச்சரவையாலோ என்னாலோதான் எடுக்கப்பட்டன. என்னைச் சுற்றியிருந்தவர்கள் முடிவெடுக்க முடியாது. அமைச்சர்கள் முடிவெடுத்தார்கள். அல்லது கபினட் குழுக்கள் முடிவெடுத்தன. அல்லது ஜனாதிபதி முடிவெடுத்தார். நானாக எந்த முடிவையும் எடுக்கவில்லை.

கே. மஹிந்த நாடாளுமன்றத்தில் தன் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாவிட்டால் என்ன நடக்கும்?

ப. பெரும்பான்மை கொண்டிருப்பவரைத் கண்டறிய வேண்டும். எங்களிடம்தான் பெரும்பான்மை இருக்கிறது. சபாநாயகரின் உத்தரவு மிகத் தெளிவானது. எதிர்த்தரப்பு பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் இல்லாவிட்டால் எங்களுக்குப் பெரும்பான்மை இருப்பதாகத்தான் அர்த்தம்.

கே. தமிழ் அரசியல் கைதிகளை 2015க்குப் பிறகு விடுவிக்க மைத்திரிபால சிறிசேன மறுத்ததாக மங்கள சமரவீர கூறியிருக்கிறார். இது தொடர்பாக பேசியிருக்கிறீர்களா?

ப. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் உள்ளே இருக்கின்றனர். யாரையெல்லாம் விடுதலை செய்வது என்பது குறித்த விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இது குறித்து ஜனாதிபதி என்ன நினைத்தார் என எனக்குத் தெரியாது. அவர் என்னிடம் இது குறித்து விவாதிக்கவில்லை.

கைதிகள் குறித்து தொடர்ந்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். சிலர் 15-20 ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார்கள். அம்மாதிரியானவர்கள் சார்பான வழக்குகளை பச்சாத்தாபத்துடன் அணுகுகிறோம்.

கே. ஜனாதிபதியைக் கொல்ல முயற்சி நடந்ததாக அவர் கூறியதாக கூறப்பட்டது. அதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

ப. பொலிஸ் விசாரித்து வருகிறது. இது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கும்படி பொலிஸ்துறையிடம் சொல்லியிருக்கிறேன்.

கே. இலங்கையின் தற்போதைய மோசமான பொருளாதார நிலைமைக்கு நீங்களே காரணமென்ற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

ப. சர்வதேச நிதியம் மற்றும் பல அறிக்கைகளைப் பார்த்தால் நாடு பொருளாதார ரீதியில் சிறப்பாகச் செயல்படுவது தெரியும். நாடு முன்னேறியிருக்கிறது. பொருளாதாரம் ஸ்திரமடைந்திருக்கிறது. கடன்கள் திரும்பச் செலுத்தப்பட்டுவருகின்றன. விலைவாசி உயர்வு ஒரு பிரச்சினைதான். ஆனால், உலகம் முழுவதும் இந்தப் பிரச்சனை இருக்கிறது. இந்தியாவில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. இந்தோனேசியாவில் இருக்கிறது. டொலர் மதிப்பு உயர்வதும் பெற்றோலியத்தின் விலை உயர்வதும் இதற்குக் காரணம். உலகின் பல நாடுகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

கே. கடந்த மூன்று ஆண்டுகளில் எந்த சந்தர்ப்பத்திலாவது ஜனாதிபதி உங்களோடு ஒத்துழைக்க மறுத்திருக்கிறாரா?

ப. பலவிடயங்களில்அவருக்கென கருத்துகள் உண்டு. அதைப் பற்றி விவாதித்து, தீர்த்திருக்கிறோம். எல்லா விடயங்களிலும் ஒத்துப்போகவில்லையென்பது உண்மைதான். ஆனால், பெரிதாக எந்தச் சர்ச்சையுமில்லை.

கே. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நீங்களும் மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றாக இணைந்தீர்கள். அதன் பிறகு என்ன நடந்தது? பிளவு எப்படி ஏற்பட்டது?

ப. அவரோடு எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. கடந்த மாதத்திலிருந்துஅவர்தான்என்னைப் பற்றிப் புகார் கூற ஆரம்பித்தார்.

கே. ஆனால், எட்டு மாதங்களுக்கு முன்பிருந்தே அவர் உங்களுக்குப் பதிலாக ஆட்களைத் தேடிவந்தார்..

ப. அவர் அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அதைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை. எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதில் நான் வெற்றி பெற்றேன். பிரதமருக்கு எதிராகத் தான் சதி செய்வதை நாட்டுக்குத்தெரிவிக்க இதையெல்லாம் அவர் செய்தாரோ என்னவோ..

கே. வடக்கையும் கிழக்கையும் இணைக்க ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லையென ஜனாதிபதி கூறியிருக்கிறார். கூட்டமைப்பின் ஆதரவுடன்தான் மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வர முடியுமென்றால் என்ன செய்வீர்கள்?

ப. வடக்கு – கிழக்கு இணைப்பைப் பொறுத்தவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தவிர பிற கட்சிகள் எதுவும் அந்தக் கோரிக்கையை விடுக்கவில்லை. மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிப்பதைப் பற்றிக் கேட்க வேண்டுமென்றால், அதற்கு சரியான நபர் எதிர்க்கட்சித் தலைவர்தான். அவர்தான் ஜனாதிபதியோடு இது தொடர்பாக நீண்ட விவாதங்களை நடத்தியிருக்கிறார். மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டுமென அவரது கட்சி கோரியிருக்கிறது. (ஐ)

# கோட்டாவின் வாகனம் விபத்து

கொழும்பு, நவ. 08

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவியும் பயணித்த ஜீப் வண்டி, நேற்றுக் காலை, ஹக்மன – தெனகம பிரதேசத்தில் வைத்து ட்ராக்டருடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

ட்ராக்டர் சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும், இந்த விபத்தில், கோட்டாபய ராஜபக்ஷவுக்கோ அல்லது அவரது மனைவி அனோமா ராஜபக்ஷவுக்கோ, எவ்வித ஆபத்தும் நேரவில்லையென ஹக்மன பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## யாழ். இந்து பரிசளிப்பு











யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 5ஆம் திகதி கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் சதா நிமலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக சிவா ராஜேந்திரமும் (பொறியியலாளர் – அவுஸ்திரேலியா) கலந்து சிறப்பித்தனர். திருமதி பவானி விக்கினேஸ்வரன் அவர்கள் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.